# தமிழ்ச் சிறுகதைகளில் பெண்கள் பிரச்சனைகள்

(அட்டவணைத் தொகுப்பு)

தமிழ்த்துறை
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
கொடைக்கானல்

# தமிழ்ச் சிறுகதைகளில் பெண்கள் பிரச்சனைகள்

(அட்டவணைத் தொகுப்பு)

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்
தமிழ்த்துறை ஆய்வு
கொடைக்கானல்

1. EDITOR : Dr. (Ms) Devadatta M.A., Ph.D.
Professor and Head
Department of Tamil
Mother Teresa Women's University,
Kodaikanal - 624 102.

2. TITLE : Women's problems in Tamil Short stories

3. IMPRINT :

i. Place of publication : Mother Teresa Women's University,
Kodaikanal - 624 102.

ii. Year of Publication : 1990

iii. Edition : First Edition

iv. No. of Copies : 1000

v. Size of the Publication : 1/8 Demy

4. Number of Pages : 216

5. Subject : Tamil

6. Printers : Maniam Press
3, Sudalaimuthu Pillai Lane
Kamarajar Salai,
Madurai-9.

7. Price : Rs. 12

# அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

### கொடைக்கானல்

டாக்டர். (திருமதி) ஜெயாகோதைப்பிள்ளை,
எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.,

துணைவேந்தர்

## வாழ்த்துரை

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக தமிழ்த்துறை மேற்கொண்ட ''சிறுகதைகளில் பெண்கள் பிரச்சனைகள் — அட்டவணைத் தொகுப்பு'' என்ற இந்த ஆய்வுப்பணி பல்கலைக் கழக வெளியீடாக வருவது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி-யடைகிறேன்.

இப்பல்கலைக்கழ்கத்தின் நோக்கத்திற்கேற்ப மகளிர் மேம்பாடு குறித்த பல ஆய்வுகள் மேலும் வெளிவர, இவ்வாய்வு அடிப்படையாக அமையும். இதுபோன்ற ஆய்வுகள் மேற்கொள்ளப் பெறுவதும் அவை அச்சில் வெளிவருவதும் இன்றியமையாததாகும்.

இவ்வாய்வுப் பணியை பதிப்பாசிரியராக இருந்து சிறப்புற நிறைவேற்றிய தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர். தேவதத்தா அவர்களுக்கும், தமிழ்த்துறையினர்க்கும் எனது பாராட்டுக்கள்.

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை இதுபோன்று மேலும் பல ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு பெண்களின் நிலை மேம்பாடு அடையத் துணைநிற்க வாழ்த்து-கிறேன்.

டாக்டர். ஜெயாகோதைப்பிள்ளை
துணைவேந்தா

# பதிப்புரை

இலக்கியத் தொடர்பான அடிப்படை ஆய்வுகள் இந்தியாவில் மிகக்குறைவு. குறிப்பாக தமிழகத்தில் இவ்வாய்வுகள் மிகவும் குறைந்த நிலையிலேயே உள்ளன. அடிப்படை ஆய்வுகளைப் பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள் போன்றன மேற்கொண்டால்தான் தொடர்ந்து பலர் சேர்ந்து சில ஆண்டுகளில் செய்யமுடியும். தனிமனிதரோ, ஆய்வாளர் ஒருவரோ இவ் ஆய்வினை மேற்கொண்டு செய்வது என்பது மிகவும் கடினம்.

பெண்களுக்கென நிறுவப்பட்ட பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை எப்படிப்பட்ட ஆய்வுத்திட்டங்களை மேற்கொண்டால் சில ஆண்டுகளுக்குப்பின் மதிப்பிடும்போது, சிறந்த முறையில் பணியாற்றியுள்ளது என்பதை நிறுவ இவை பயன்படும் என்பதால் மேற்கூறிய ஆய்வுத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

பல பேராசிரியர்களோடு கலந்துரையாடி இத்திட்டங்களை மேற்கொள்வதற்கு முன் பலமுறை சிந்தித்து தமிழியல் ஆய்வை, குறிப்பாகப் பெண்களைக் குறித்த ஆய்வை எதிர்காலத்தில் மேற்கொள்ளும் பல ஆய்வாளருக்கும் பெரிதும் நலம்பயக்கும் என்ற நோக்காலும், இப்படிப்பட்ட செயல்பாடுகளைப் பல்கலைக்கழகங்கள்தாம் ஏற்றுச் செய்யமுடியும் என்ற எண்ணம் தீவிரப்படவும் இவற்றைச் செயல்படுத்தினோம்.

முதலில் இக்கால இலக்கியங்களில் ஒன்றான சிறுகதைகளைப் பற்றித் திறனாய்வு செய்யலாம் என்ற நோக்கில், சிறுகதை தோன்றிய 1927ஆம் ஆண்டு 1980ஆம் ஆண்டுவரையிலான 5008 சிறுகதைகளில் பெண்களின் எந்தெந்தப் பிரச்சனைகள் மையப்படுத்தப்பட்டுள்ளன என்று பார்க்கப்பட்டுள்ளது.

இத்தகைய ஆய்வின் மூலம்

1. சமூக பிரக்ஞையோடு எந்தெந்த சிறுகதை ஆசிரியர்கள் பெண்களின் பிரச்சனைகளைக் கூறியுள்ளார்கள்.

2. ஒவ்வொரு பத்தாண்டு காலத்திலும் பேசப்பட்டுள்ள பிரச்சனைகள் ஒரேமாதிரியாக உள்ளனவா அல்லது மாறுபட்டுள்ளனவா?

3. ஒவ்வொரு காலகட்டத்திலும் சமூகச்சூழலை ஆராய்ந்து அந்தந்தக் காலகட்டத்தில் புதிதாக முளைத்திருக்கின்ற பிரச்சனைகளை ஆராய்வதும், அவற்றிற்கான காரணங்களைத் தெரிந்துகொள்ளவும்.

4. சமகாலச் சிறுகதை ஆசிரியர்கள் எந்தெந்தப் பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதியுள்ளார்கள்?

எழுதவில்லையென்றால் அதற்குரிய காரணங்கள் யாவை?

எழுதியிருப்பவர்களுள்ளும் யார் யார் அந்தப் பிரச்சனைகளை ஆழ்ந்த சமூக நோக்குடன் ஊடுருவிப்பார்த்து, தங்கள் படைப்புக்களைப் படைத்திருக்கிறார்கள் என்பனவற்றை அறியலாம்.

இவ்வாய்வு சமுதாயத்தில் இக்காலகட்டத்திற்குரிய பிரச்சனைகளைக் கண்டறியவும், அதன் விளைவுகளைத் தெளிவாக உணரவும் அதற்கான சமூகச் சூழ்நிலையைக் காணவும் உதவும்.

1927ஆம் ஆண்டு முதல் 1980ஆம் ஆண்டுவரை வெளிவந்த சிறுகதைகள் அனைத்தையும் பார்த்து இவ்வாய்வினைச் செய்யவேண்டும் என்பது பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் பெருவிருப்பம்.

சிறுகதைகளைத் தேடிச்சென்ற துணை ஆய்வாளர்கள் திருமதி வாசுகி, செல்வி பிரேமா ஆகியோருக்கும் பல நூல்கள் கிடைக்கவில்லை. பல்வேறு இடங்களில் பன்முறை முயன்றும் சில அரிய நூல்கள் கிடைக்கவில்லை.

எல்லா நூல்களையும் தேடிக் கண்டபின்னரே இந்த ஆய்வை முடிக்கலாம் என்ற முடிவை ஏற்றுக்கொண்டால் நிச்சயமாக ஆண்டு பல வீணாகும் என்பதால் கிடைத்த நூல்களைப் பயன்படுத்தித் தரவுகளைச்சேகரித்து, அவற்றைத் தொகுத்து விமரிசனம் செய்து அச்சேற்றுவது பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் செயல்பாட்டினைத் தேக்கமடையச் செய்யாது என்பதால் இந்நூல் அச்சேறுகிறது.

முக்கியமான சில சிறுகதையாசிரியர்களும், சில ஆசிரியர்களின் முக்கியமான சிறுகதைத் தொகுப்புகளும் விடுபட்டிருக்கலாம் - விடுபட்டிருக்கின்றன.

இந்த நூல் பலரது கைகளில் தவழும்போது அவர்கள் விடுபட்ட நூல்களையோ அல்லது எங்களையும் அறியாமல் தவிர்க்கப்பட்ட ஆசிரியர்களையோ குறிப்பிட்டு எழுதுவார்களாயின் மறுபதிப்பில் தவறாமல் இப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சேர்த்துக்கொள்ளும்.

இந்நூலினைப் பார்க்கும் படைப்பாளர்களுக்கும், பேராசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கும் இப்பல்கலைத் தமிழ்த்துறையின் சார்பில் வேண்டிக்கொள்வதெல்லாம், விடுபட்ட ஆசிரியர்களோ, நூல்களோ, உங்களுக்கு அறியவரும்போது அன்பு கூர்ந்து தெரிவிக்கவும்.

உங்களின் கருத்து பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கு மட்டுமின்றி, தமிழ் உலகிற்கு மிகுந்த பயனை நல்கும்.

உங்கள் கருத்துக்களைத் தடையின்றி, உரிமையுடன் வெளிப்படையாக எழுதுங்கள்.

தேவதத்தா
தமிழ்ப்பேராசிரியர் — தலைவர்
பதிப்பாசிரியர்.

## நன்றியுரை

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மேற்கொண்ட ஆய்வுத்திட்டப் பணிகளுக்கு அனுமதியளித்து, ஊக்கத்துடன் செயலாற்றத் தூண்டுகோலாய் அமைந்த இப்பல் கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தரான பேராசிரியர் திருமதி. வசந்திதேவி அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குவதில் மகிழ்ச்சி கொள்கிறோம்.

மேற்கொண்ட செயல் எதுவாயினும் அதனைக் காலத் தோடு முடிப்பதில்தான் செயல்திறன் அடங்கியுள்ளது என்று அவ்வப்போது நினைவூட்டி ஆய்வுத்திட்டப் பணியை முடிக்கத் துணைநின்று அன்புடன் வாழ்த்துரை வழங்கிய இப்போதைய துணைவேந்தர் திருமதி. டாக்டர் ஜெயா கோதைப்பிள்ளை அவர்களுக்குத் தமிழ்த் துறை தன் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்த்துறை எடுத்துக் கொள்ளும் பணி எதுவாயினும் அது பயன்பாடு மிக்கதாய் அமைய வேண்டும் என்ற நோக்கிற்கு உரமூட்டும் வகையில் பல்வேறு கல்வி நிறுவனங்களும் நூலகங்களும் இந்த ஆய்வுத்திட்டத்திற்கான நூல்களைத் தந்து உதவின. இந்தக் கல்வி நிறுவனங்களின் தலைமைப்பதவியில் இருப்போர்க்கும் நூலகத்தார்க்கும் எங்கள் நன்றி.

கிடைத்தற்கரிதான மணிக்கொடிக்காலச் சிறுகதைகள் சிலவற்றை ஆய்விற்குத் தவறாமல் பார்க்கப்படவேண்டும் என்று அன்புடன் கொடுத்துதவிய திரு. சிட்டி சிவபாதசுந்தரம் ஆகியோர்க்கும், பல்வேறு நூலகங்களில் தேடியும் கிடைக்காத துவக்ககால, தரமான சிறுகதைத் தொகுப்புக்களை அக்கறையோடு தந்துதவிய மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் டாக்டர். சு. வேங்கடராமன் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

எங்களின் இந்த ஆய்வுப் பணியை மதிப்பீடு செய்து, சில மாற்றங்களைச் செய்யுமாறு கூறி எங்கள் பணியைப் பாராட்டி, ஊக்கமளித்து நூலாக வெளிவர பரிந்துரை செய்த செல்வி. சகுந்தலா, முதல்வர், காவேரிக் கல்லூரி, திருச்சி, அவர்களுக்கு தமிழ்த்துறை தன் உள்ளார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறது.

நாங்கள் மேற்கொண்ட இந்த ஆய்வுப்பணியை நூல்வடிவில் வெளியிட்டு பலருக்கும் பயன்பட உதவிய பல்கலைக்கழகத்திற்கும் எங்கள் நன்றி.

தமிழ்த்துறையினர்

# பொருளடக்கம்

பக்கம்

முன்னுரை

1. இயல் 1 — பன்னிரண்டு வயதிற்குட்பட்ட சிறுமியரின் பிரச்சனைகள். 10

2. இயல் 2 — மணமாகாத பெண்களின் பிரச்சனைகள். 18

3. இயல் 3 — திருமணமான பெண்களின் பிரச்சனைகள். 74

4. இயல் 4 — வயதான பெண்களின் பிரச்சனைகள். 150

# தமிழ்ச்சிறுகதைகளில் பெண்கள் பிரச்சனைகள்
## (1927ஆம் ஆண்டு முதல் 1980ஆம் ஆண்டுவரை)

இந்தியாவைப் பொறுத்தவரையில் அடிப்படை ஆய்வுகள் (Basic Researches) முறையாகச் செய்யப்பெறவில்லை என்பது யதார்த்த உண்மையாகும். அவற்றுள்ளும் மொழிகள் (Languages) தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத நிலையிலேயே உள்ளன எனலாம். அடிப்படை ஆய்வுகள் சிறப்புற மேற்கொள்ளப்படின் அவ்வத்துறை வளர்ச்சிக்கு அவை பெருமளவில் பயன்படக்கூடும். அடிப்படை ஆய்வுகளைத் தனி நபர் மேற்கொள்ளுதல் கடினமான காரியமாகவும் காலவிரயம் ஏற்படுத்துவதாகவும் அமைந்துவிடும். எனவே பல்கலைக்கழகங்கள் தகுதியுடைய பிற நிறுவனங்கள், இயக்கங்கள் — இவ் அடிப்படை ஆய்வுகளை மேற்கொண்டால் தொடர்புள்ள துறைகளுக்கும் சமூகத்துக்கும் பெரும் பயன் விளைத்திடும். அவ்வத்துறையில் தொடர்ந்து மேற்கொள்வோரும் இவ்வடிப்படை ஆய்வு முடிபுகளைப் பயன்படுத்திக்கொண்டு ஆழ்ந்து அகன்ற ஆய்வுகளை மேலும் சிறப்புற மேற்கொள்ள வியலும்.

பரந்துபட்ட இவ்வடிப்படை நோக்கில்தான் மகளிர்க்காகவே தொடங்கப்பெற்று இயங்கிவரும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தன் ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

பழந்தமிழ் இலக்கியங்கள் சுட்டிக்காட்டும் பெண்மைக்கோட்பாடுகளைப் பற்றியும், பெண்களைப்பற்றிய பிற கருத்துக்கள் பிரச்சனைகள் குறித்தும் ஆய்ந்தறிதற்கு முன்னால், இன்றைய காலகட்டத்தில் கல்வியறிவு பெற்றுள்ள பெரும்பான்மையோரால் படித்துச் சுவைக்கப்படுகின்ற தற்கால இலக்கிய வகைகளுள் ஒன்றான சிறுகதை இலக்கியத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதன் வாயிலாகப் பெண்ணினத்தைச் சூழ்ந்திருக்கிற நடைமுறைப்பிரச்சனைகளை அறிந்து கொள்ளவும், உரிய தீர்வுகாணவும் வாய்ப்பேற்படும் என்கிற நோக்கில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

காலத்தால் உருவான கலைவடிவங்களே இலக்கியங்கள். சிறுகதை, நவீன இலக்கிய வகைகளுள் ஒன்று.

தமிழில் நாவல்தோன்றி ஏறத்தாழ அரைநூற்றாண்டிற்குப் பின்னரே சிறுகதை தோன்றியது என்பர்.

1927ஆம் ஆண்டு வெளிவந்த வ. வே. சு. ஐயரின் 'மங்கையர்க்கரசியின் காதலே' முதல் தமிழ்ச்சிறுகதைத் தொகுதியாகக் கருதப்படுகின்றது,

வ. வே. சு. ஐயர் தமிழ்ச்சிறுகதையின் தந்தை எனப்போற்றப்படுவர். ஆனால் அவர் காலத்திற்கு முன்னரே சிறிய உருவத்தினவாகிய கதைகள் எழுதப்பட்டு வந்தன. அவற்றில் ஆய்வுக்குக் கிடைத்த சிறுகதைகளில் நடேசசாஸ்திரிகளின் 'திராவிட மத்திய காலக்கதைகள் என்னும் சிறுகதைத்தொகுதி 1897ஆம் ஆண்டிலேயே வெளிவந்திருக்கிறது. இத்தொகுதி மொழி பெயர்ப்பாக இருக்கலாம் என்ற கருத்தில் இது முதல்தொகுதியாக எடுத்துக்கொள்ளப்பெறவில்லை எனக் கருத இடமுள்ளது.

வ.வே.சு. ஐயர், பாரதியார், மாதவையா, கல்கி போன்றோர் சிறுகதை இலக்கியம் வேரூன்றஆதார கருதிகளாக விளங்கியவர்கள். அதன் பின்னர் தமிழ்ச்சிறுகதை வரலாற்றில் மணிக்கொடியின் பங்கு வெகு சிறப்பான இடத்தை பெற்றிருந்தது. 1933ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற மணிக்கொடியில் வ.ரா. தி.ஜ ரங்கநாதன், பெ.கோ. சுந்தர்ராஜன், புதுமைப்பித்தன், கு.ப. ராஜகோபாலன், பி.எஸ். இராமையா, மௌனி போன்றோர் சிறுகதை இலக்கியத்தின் எழுச்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் வித்திட்டனர்.

காலமாற்றங்களுக்கேற்ப சமுதாய வளர்ச்சிப்போக்கிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்வது இயல்பு. அத்தகைய நடைமுறைகளைப் பிரதிபலித்துக்காட்டும் ஏனைய புதின இலக்கியங்களைப் போலவே சிறுகதை இலக்கியமும் அக்காலத்துச் சமூக நிலைகளைப் பிரதிபலிப்பதாக விளங்குகிறது.

'குறிப்பிட்ட ஒரு சம்பவத்தில் மனித மனம் படும்பாட்டை அல்லது ஒரு பாத்திரம் இயங்குகின்ற முறைமையைக் குறிப்பதுவே சிறுகதை.

சிறுகதைகள் வெறும் பொழுதுபோக்கு சாதனமாக மட்டுமல்லாமல் கருத்துக்களைத் தெரிவிக்கும் வகையிலான கூறுகளைக் கொண்டு வெளிவருகின்றன. அவை எவ்வகைக் கருத்துக்களோடு, மக்களை எதிர்கொள்கின்றன; அதன்மூலம் அவை காட்டும் மகளிர் நிலை என்ன என்பதைக் கண்டறியும் நோக்கில் இவ்வாய்வு அமைந்துள்ளது.

1927 - 1950, 1950 - 1960, 1960 - 1970, 1970 - 1980 என நான்கு காலகட்டங்களாகப் பகுத்துக்கொள்ளப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. முதல் காலக்கட்டம் தேசவிடுதலைக்கு முற்பட்ட வாழ்வுச்சூழல், பிரச்சனைகளைக் கொண்டது. பின் உள்ள காலக் கட்டங்கள் தேசவிடுதலை தொடங்கி அண்மைக்காலம் வரையிலான நடைமுறைப் பிரச்சனைகளைக் கொண்டவை. ஒவ்வொரு கால கட்டத்திலும் சமுதாயத்தில் எழுகின்ற பிரச்சனைகள், அவற்றின் வளர்ச்சி மாற்றங்கள் தீர்வுக்கான பரிந்துரைகள் என்னும் நிலைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம் :-**

பெண் அமைதியானவள்; அடக்கமானவள்; அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகியவை பெண்ணிற்குரிய அணிகலன்கள் என்று ஆண்டாண்டு காலமாகவே கூறி, பெண்ணின் எழுச்சியை, உணர்ச்சியை, திறமையை அமிழ்த்தி வைத்திருந்தது, சமுதாயம். ஆணைவிட பெண் குறைந்தவள் என்ற எண்ணம் பண்பாடு என்னும் போர்வையில் மூழ்கிப்போன ஒன்றாகிவிட்டது. இதனால் பெண் பல பிரச்சனைகளுக்கும் அல்லல்களுக்கும் உள்ளானாள்.

வாழ்க்கையின் தாக்கங்களே எழுத்துக்களால் வடிவம் பெற்று இலக்கியங்களாகப் படைக்கப்படுகின்றன. பெண்கள் எத்தகைய

பிரச்சனைகளுக்கு ஆளானார்கள்? எவ்வாறு மதிக்கப்பட்டார்கள் என்பதைச் சிறுகதைகள் சித்தரிப்பதை ஆராய்வது ஆய்வின் நோக்கமாக அமைகிறது.

இவ்வாய்வு நான்கு பகுதிகளாய் பாகுபாடு செய்து வகைப்படுத்தப்படுகிறது.

1. பன்னிரண்டு வயதிற்குட்பட்ட சிறுமியரின் பிரச்சனைகள்
2. மணமாகாத பெண்களின் பிரச்சனைகள்
3. மணமான பெண்களின் பிரச்சனைகள்
4. வயதான பெண்களின் பிரச்சனைகள்,

முதல் பகுதியில்,

1. பெண்ணாகப் பிறந்துவிட்டதால் தந்தையால் வெறுக்கப்பட்டுத் துன்பத்திற்குள்ளாகும் நிலை.
2. பெற்றோரை இழந்த சிறுமியர், உறவினர்களால் பல கொடுமைகளுக்கு உள்ளாகும் நிலை.
3. பாலிய விவாகத்தால் சிறுமியர் அடையும் இன்னல்கள் ஆகியன இடம்பெறுகின்றன.

இரண்டாவது பகுதி திருமணமாகாத பெண்களின் பிரச்சனைகளைப் பற்றியது.

1. ஜாதகப் பொருத்தமின்மை, தோஷம் ஆகியவற்றால் திருமணம் தடைப்பட்டு சமுதாயத்தால் இகழப்படும் பெண்கள்.
2. வரதட்சணையால் திருமணம் நடைபெறாமல் நிற்கும் பெண்கள்.
3. அழகின்மையால் யாரும் திருமணம் செய்துகொள்ளாமலும் அழகயிருந்தமையால் ஆண்களின் தொந்தரவுக்கு உள்ளாகியும் துன்பமடைந்த பெண்கள்,

4. கௌரவம் என்ற போர்வையில் சுதந்திரமின்றித் தன் விருப்பு வெறுப்புக்களை, திறமைகளை அடக்கி வாழ்ந்த பெண்கள்.

5. ஆண்களின் பலாத்காரத்தால் துயரமடைந்த பெண்கள்.

6. ஊராரின் அவதூறுகளால் நிம்மதியிழந்த பெண்கள்.

7. காதல் தோல்வியால் வாழ்க்கை இழந்த பெண்கள்.

8. பிறவி ஊனத்தால் பிரச்சனைகளை எதிர்கொண்ட பெண்கள்.

9. வறுமையால் பாதிக்கப்பட்ட பெண்கள்.

10. கட்டாயத் திருமணத்தால் இன்னல்களை அடைந்த பெண்கள்.

11. நடிப்புத் தொழிலில் ஈடுபட்டு தயாரிப்பாளர்களாலும், ஏனையோர்களாலும் தொல்லைகளுக்குள்ளான பெண்கள்.

12. தாசிகுலத்தில் பிறந்தமையால் அவ்வாழ்வினின்றும் வெளிவர முடியாமல் தவிக்கும் பெண்கள்.

இவ்வாறாகப் பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்கி அதனால் வாழ்க்கையை இழந்த, வாழமுடியாமல் தவித்த பெண்களைப் பார்க்கிறோம்.

மூன்றாவது பகுதி திருமணமான பெண்களின் பிரச்சனைகளைப் பற்றியது.

1. வயது, கல்வி, அழகு போன்றவற்றில் சிறிதேனும் பொருத்தமில்லாத ஆண்மகனுடன் வாழ்வைப் பிணைத்துக்கொண்டு அதனால் பெண்கள் அடைந்த இன்னல்கள்.

2. கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் துயரங்கள்.

3. சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட விதவையர் நிலை, அவர்கள் மறுமணம் செய்துகொள்ள விரும்பியும் சமுதாயக் கட்டுப்பாடுகளுக்குப் பயந்து தற்கொலை செய்துகொண்ட நிலை, சமுதாயத்தை எதிர்த்து மறுமணம் செய்துகொண்ட பெண்களின் நிலை, இவர்கள் அடைந்த இன்னல்கள்.

4. குழந்தையின்மையால் புகுந்த வீட்டாராலும் ஊராராலும் 'மலடி' என்னும் பட்டத்துடன் பழிகளைத் தாங்கிய பெண்கள்.

5. கூட்டுக்குடும்ப அமைப்பால் கணவனுடன் பேச முடியாமை, வெளியில் செல்ல சுதந்திரமின்மை, தாய் வீடு செல்ல உரிமையின்மை ஆகிய பிரச்சனைகளை எதிர்கொண்ட பெண்கள்

6. வறுமையால் தன் கற்பையே விலைபேசும் பெண்கள்

7. கலப்புத்திருமணத்தால் பழி ஏற்கும் பெண்கள்

8. கணவன், மாமியார் நாத்தனார் போன்றோரின் கொடுமைகளுக்கு ஆளான பெண்கள் ஆகியோரது பிரச்சனைகள் இடம்பெறுகின்றன.

நான்காவது இயல் வயதான பெண்களின் பிரச்சனைகளைப் பற்றியது. எந்த உறவுமின்றித் தனியே வசிக்கும் பெண்களின் நிலையையும் உறவுடன் இருந்தும் பல இன்னல்களுக்குள்ளாகும் பெண்களின் நிலையையும் இப்பகுதியில் காணலாம்.

ஆய்வின் பரப்பு :-

தமிழில் சிறுகதை தொடங்கிய காலம் முதல் 1980ஆம் ஆண்டு வரையுள்ள காலகட்டத்தில் புத்தகமாக வெளிவந்த

சிறுகதைத் தொகுப்புகள் அனைத்தும் ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

மொழிபெயர்ப்பு நூல்கள் இவ்வாய்வில் எடுத்துக்கொள்ளப் படவில்லை.

ஆய்வுப் பயன் :

சமுதாயத்தில் பெண்கள் எதிர்கொண்ட பிரச்சனைகளைச் சிறுகதைகள் எவ்வாறு பார்த்தன என்பதுபற்றி பரந்த அளவில் ஆய்வேடுகள் வெளிவர உறுதுணையாய் இவ்வாய்வு அமையக் கூடும்.

எடுத்துக்காட்டாக 'வரதட்சணை' பற்றிய ஆய்வை ஒருவர் மேற்கொண்டால் அவ்வாய்விற்கு வேண்டிய அடிப்படைத் தரவுகள் இதன் மூலம் பெறப்பட்டு, காலம் வீணாவது தவிர்க்கப்படுகிறது.

இந்த அடிப்படை ஆய்வு உடனடிப்பயன் தரவில்லை-யென்றாலும், அடிப்படைச் செய்திகளைப் பற்றிய ஆய்வுகள் இல்லை என்ற பெருங்குறை ஓரளவு நீங்கும். பல ஆய்வாளர்-களுக்குத் தேவைப்படும் அடிப்படைச் செய்திகளைத் தருவதற்கு பயன்படும்.

சமூக பிரஞ்ஞையும் ஆழ்ந்த சிந்தனையும் உடையவர்-களுக்கு இப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறை எடுத்துள்ள இந்த ஆய்வுத்திட்டம் பல்வேறு நோக்கிலும் போக்கிலும் பயன்தரும்.

1. இதுவரை கிடைத்த 5008 சிறுகதைகள் இவ் ஆய்விற்காகப் பயன்படுத்தப்பட்டன.

2. நூலின் பெயர், ஆசிரியர் பெயர், வெளியீடு, இடம் பெறும் பெண் பாத்திரங்கள், கதையில் இடம் பெறும் பெண்ணின் பிரச்சனை, சமுதாயச் சூழல், கதையின் கருத்தமைவு ஆகியவை அடங்கிய பட்டியல் அனைத்துச் சிறுகதைகளுக்கும் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பட்டியல் எந்த ஆண்டில் எவ்வகைப்பட்ட பிரச்சனை எந்தெந்த ஆசிரியர்களால் பேசப்பட்டிருக்கின்றது எபன்தை அறிய வகைசெய்யும்.

3. பிரச்சனைகள் வகைப்படுத்தப்பட்டு அப்பிரச்சனைகளைத் தம் கதைகளில் கொணர்ந்தஆசிரியர்கள், ஆண்டு இவை அடங்கிய பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

4. 1927லிருந்து 1980 வரையில் கிடைத்த சிறுகதைத் தொகுப்புக்களில் அடங்கியுள்ள சிறுகதைகள் அனைத்தையும் பார்த்து பிரச்சனைகளின் அடிப்படையில் குறிப்பு அட்டைகள் (Index cards) தயாரிக்கப்பட்டு நூலகத்தில் நிரந்தரமான இடத்தைப் பெறுகின்றன. சிறுகதைகளில் பெண்களின் பிரச்சனைகளை ஆய்கின்ற எதிர்கால ஆய்வாளர்க்கு இக்குறிப்பட்டைகள் பெரிதும் பயன்படும். இதுவே அடிப்படை ஆய்வின் தலையாய பயன்பாடாகும்

அட்டவணை I

| ஆண்டு | சிறுகதை ஆசிரியர்கள் | தரவுகள் சேகரிக்கப்பட்ட சிறுகதைகள் |
|---|---|---|
| 1927—1950 | 120 | 1417 |
| 1950—1960 | 117 | 589 |
| 1960—1970 | 58 | 942 |
| 1970—1980 | 125 | 2060 |
| | | 5008 |

**பயன்படுத்திய நூலகங்கள் :**

1. மறைமலை அடிகள் நூலகம், சென்னை.
2. உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.
3. சென்னைப் பல்கலைக்கழக நூலகம்.
4. தெ.பொ.மீ. நூலகம், மதுரை காமராஜர் பல்கலைக் கழகம், மதுரை.
5. மத்திய நூலகம், மதுரை.
6. சௌராஷ்டிரா பழைய மாணவர் சங்க நூலகம், மதுரை.
7. உ.வே.சா. நூலகம், சென்னை.
8. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக நூலகம், கொடைக்கானல்.

# இயல் ஒன்று

## பன்னிரண்டு வயதிற்குட்பட்ட சிறுமியரின் பிரச்சனைகள்

சமுதாயத்தில் பெண்கள் எதிர்கொண்ட பிரச்சனைகளுள் சிறுமியர் அடைந்த பிரச்சனைகள் மிகக் கொடியன. 'பெண் குழந்தை' என்றாலே வெறுப்படையும் பெற்றோரால், துயர்படும் சிறுமியர் நிலைகளையும், தாய் தந்தையற்ற சிறுமிகள் அத்தை, சிற்றன்னை போன்றோரால் துன்பமடையும் நிலைகளையும் பாலிய விவாகத்தால் வாழ்க்கையே துன்பமாக்கப்பெற்றுத் தவிக்கும் சிறுமியரின் நிலைகளையும் இவ்வியலுள் காணலாம்.

**பெண்பிறந்தமையால் வெறுப்பு :-**

செல்வந்தராக இருந்த போதிலும் பெண் பிறந்தமையால் பிறந்தவுடன் தாயை இழந்துவிட்ட அப்பெண் மீது எவ்விதப் பாசத்தையும் பரிவையும் காட்டாது வெறுப்புக் கொள்ளும் தந்தை,[1] பெண் குழந்தை பிறந்ததால் மனைவியைத் தாய்வீட்டிலேயே விட்டுவிட்டுச் செல்லும் கணவன்,[2] பெண்ணாகப் பிறந்தமையால் அக்குழந்தையின் முகத்தைக்கூடப் பார்க்காத கணவன்,[3] ஆகியோரைச் சிறுகதைகளில் காண முடிகின்றது. இக்கதைகளில் காணும் தந்தையர் இறுதியில் மனமாற்றம் பெறுவதாகவும் கதைகள் அமைந்திருக்கின்றன.

தொடக்ககாலச் சிறுகதைகளுள் ஒன்றிலும், 1970ஆம் ஆண்டு முதல் 1980ஆம் ஆண்டு வரையுள்ள காலகட்டத்துச் சிறுகதைகள் இரண்டிலும் இப்பிரச்சனை இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. இவற்றுக்கிடைப்பட்ட காலகட்டத்தில் சிறுகதைளில் இப்பிரச்சனை இடம்பெறவில்லையென்றாலும் பெண் சிசுக்கொலை இன்றளவிலும் சமுதாயத்தில் ஆங்காங்கே இடம்பெற்று வருவதை செய்தித்தாள்களின் வாயிலாக அறிய முடிகின்றது.[4]

அனாதைச் சிறுமியர் :-

1. தாய் தந்தையரை இழந்த சிறுமியர் உலக அறிவைப் பெறும்வரை படும் துயரம்.[5]

2. பெரியம்மா போன்ற உறவினரால் பல கொடுமை-களுக்கும் உள்ளாகும் நிலை.[6]

3. தந்தை மறுமணம் புரிந்துகொள்ள, சிற்றன்னையால் பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளாகும் நிலை.[7]

4. அரசகுலத்தில் பிறந்த சிறுமியர் எதிரிப் படைகளால் பெற்றோரை இழந்து மறைந்து ஒளிந்து பல இன்னல் களுக்கும் உள்ளாகி வாழும் நிலை.[8] ஆகிய அவலங் களை சிறுகதைகள் சித்தரிக்கின்றன.

தமிழில் சிறுகதை தோன்றிய காலம் முதல் 1950ஆம் ஆண்டு வரையுள்ள காலகட்டத்தில், அனாதைச் சிறுமியர் படும் அல்லல் களை ஒன்பது சிறுகதைகளிலும், 1950ஆம் ஆண்டு முதல் 1960 ஆம் ஆண்டுவரையுள்ள காலகட்டத்தில் மூன்று சிறுகதைகளிலும் 1960ஆம் ஆண்டு முதல் 1970ஆம் ஆண்டுவரையுள்ள காலகட் டத்தில் இரண்டு சிறுகதைகளிலும் 1970ஆம் ஆண்டு முதல் 1980ஆம் ஆண்டுவரையுள்ள காலகட்டத்தில் எட்டு சிறுகதை களிலும் காணமுடிகின்றன,

குழந்தைத் திருமணம் :-

பெண்களின் பிரச்சினைகளில் பாலிய விவாகம் தலையாய பிரச்சனையாக விளங்கி வந்துள்ளது. தங்களது உறவுமுறை நெருக்கம் விடுபட்டுவிடக்கூடாது ; தங்களது சொத்துக்கள் திரு-மணங்கள் காரணமாக அயலாரிடம் சென்று சேர்ந்துவிடக்கூடாது என்பன போன்ற காரணங்களால் பெற்றோர் தங்கள் குழந்தை களுக்கு அறியா இளம்வயதிலேயே திருமணம் நிகழ்த்தி மன நிறை வெய்தினர். திருமணம் நிகழ்ந்த பின்னும் பெண் பிறந்த வீட்டி-

லேயே வாழ்ந்து வருவாள். பருவம் எய்திய பின்னரே பெண்ணின் பெற்றோர் உரிய சடங்குகள் நிகழ்த்திப் பெண்ணைப் புக்ககம் அனுப்பிவைப்பார்கள். இம்முறை வெகு சாதாரணமாகவே வழக்கிலிருந்து வந்திருக்கிறது.

பாலிய விவாகத்திற்கு உட்பட்ட சிறுவன் எதிர்பாரா நிலையில் இறக்க நேரிட்டால் அச்சிறுமியை விதவைக்கோலம் பூணச் செய்து வீட்டிற்குள் அடைத்து வைத்தார்கள். அவ்வறியாச்சிறுமி வளர்ந்து உலக அறிவைப்பெறும் சூழ்நிலையில் அவளது ஆசைகள் எல்லாம் நிராசைகளாகி விடுகின்றன. ஒரு வேளை பெண்மகள் இறந்து ஆண்மகன் உயிரோடு இருந்தால் அவ் ஆண்மகன் மறுமணம் புரிந்து மகிழ்வோடு வாழ அனுமதி அளித்தது சமுதாயம். அத்தகைய அநீதிக்கு இலக்காகி அறியாப் பருவத்திலேயே விதவைக்கோலம் பூண்ட பெண்களைப் பல சிறுகதைகளில் காண்கிறோம்.

பாலியவிவாகத்தால் பெண்களின் வாழ்வில் உருவாகும் பிரச்சனைகள் வெவ்வேறு கோணங்களில் சிறுகதைகளில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

1. பாலியவிவாகத்தால் மனநிலை பாதிக்கப்படும் சிறுமியின் நிலை.[9]

2. விவாகம் முடிந்த குழந்தைகள் உரிய பருவம் எய்திய பின்னும் பெரியவர்களின் மனக்கசப்பால் சேர்ந்து வாழவியலா அலைநிலை.[10]

3. இந்து முஸ்லீம் கலவரத்தால் கணவனைப் பிரிந்து பதின்மூன்று வயதிலேயே குழந்தைகளுடன் வறுமையில் வாடும் பெண்ணின் நிலை.[11]

4. அடிக்கடி ஏற்படும் கருச்சிதைவின் காரணமாக உயிர் இழத்தல்.[12]

5. பாலிய விவாகத்தால் அறியாப்பருவத்திலேயே கணவ-னை இழந்து விதவைக்கோலம் பூணுதல்.[13]

6. குழந்தை விதவை, உரிய வயதில் விதவைகளுக்குச் செய்யப்படும் மொட்டை அடித்தல் போன்ற சடங்குகளுக்கு அஞ்சி தற்கொலை செய்துகொள்ளல்.[14]

7. தனிமையைக் கருதி தற்கொலை செய்துகொள்ளுதல்[15]

8. குழந்தை விதவை, உரிய பருவகால உணர்வுகளால் நெறிதவறித் தம்மை இழந்து, பெற்ற குழந்தையை சமுதாயத்திற்கஞ்சி தத்துக்கொடுத்தல்.[16]

9. கிழவருக்கு சிறுமியை மணமுடித்துக்கொடுக்க மேற்கொண்ட முடிவைத் தடுக்க தாய் தற்கொலை செய்துகொள்ளுதல்,[17]

பாலிய விவாகத்தால் மேற்கண்ட பல்வேறு பிரச்சனைகள் உருவாகி பெண்களை வதைத்தன என்பதை உணர முடிகிறது.

பாலிய விவாகத்தால் எவ்விதப் பிரச்சனைகளுக்கும் ஆளாகாத சிறுமியரையும் இரண்டு கதைகளில்[18] காண முடிகிறது.

சிறுகதை இலக்கியம் தோன்றிய காலமுதல் 1950ஆம் ஆண்டுவரையுள்ள காலகட்டத்தில் பாலிய விவாகம் பன்னிரண்டு சிறுகதைகளில் இடம் பெற்றுள்ளது.

1950ஆம் ஆண்டு முதல் 1960ஆம் ஆண்டுவரையுள்ள காலகட்டத்தில் ஆய்வுக்குக் கிடைத்த சிறுகதைகளில் பாலிய விவாகம் இடம்பெறவில்லை.

1960ஆம் ஆண்டு முதல் 1970ஆம் ஆண்டுவரையுள்ள காலகட்டத்தில் ஐந்துகதைகளில் இப்பிரச்சனை இடம்பெற்றுள்ளது.[19]

1970ஆம் ஆண்டு முதல் 1980ஆம் ஆண்டுவரையுள்ள காலகட்டத்தில் இப்பிரச்சனை சிறுகதைகளில் இடம்பெறவில்லை.

பாலிய விவாகத்தால் உருவாகும் பல்வேறு பிரச்சனைகளைக் கருப்பொருளாகக் கொண்டு சிலகால கட்டங்களில் சிறுகதைகள் உருவாக்கப்படாமல் இருக்கலாம். ஆனால் நடைமுறையில் இப்பிரச்சனை முற்றிலும் தீர்க்கப்பட்டுவிட்டது என்று உறுதிப்பட கூறுவதற்கில்லை. ஏனெனில் பாலிய விவாகங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறுவறற்குச் சான்று உள்ளமை குறிப்பிடற்பாலது.[20]

முடிவுகள் :-

1. சமுதாயத்தில், 'பெண்' என்றாலே சலிப்பையும் வெறுப்பையும் காட்டும் நிலை சித்தரிக்கப்பட்டுள்ளது.

2. தாய் தந்தையரை இழந்த சிறுமியர் எவ்வித பாதுகாப்புமின்றி உறவினர்களின் கொடுமைகளுக்கு உள்ளாகி வந்துள்ளர்கள்.

3. பெரியவர்கள் தங்கள் விருப்பங்களைப் பிஞ்சுக் குழந்தைகளின் மீது திணித்து அவர்களது வாழ்வை நாசமாக்கியுள்ளனர்.

4. பாலிய விவாகத்தால் அந்நாளில் விபரம் அறியா விதவைச் சிறுமியரைச் சமுதாயம் ஒதுக்கிவைத்தது.

## குறிப்புக்கள்

1. ஆர். வேங்கடலட்சுமி, "யமுனை சொன்ன கதை" மோகினி, 1946,

2. எம்.எஸ். பாண்டியன், "செங்காவின் முதற்பிரசவம்", ஒரு நட்சத்திரம் மின்னுகிறது, 1977.

3. கொ. மா. கோதண்டம், "பிறக்கப்போவது பெண்ணாக இருந்தால்" மலையின் மைந்தர்கள், 1980.

4. தினமலர், 14.5.1988.

5\. 1. ஆண்டாள், "தாயில்லாக்குழந்தை", கதைக்கோவை,ப.இ.

2. நா. பார்த்தசாரதி, "வேப்பம்பழம்", காலத்துக்கு வணக்கம், 1968.

3. லட்சுமி, "தங்கத்திற்கு வழி"; பெண்ணின் பரிசு, 1958.

4. புதுமைப்பித்தன், "தியாக மூர்த்தி", காஞ்சனை, 1943.

5. ந. பிச்சமூர்த்தி, "கபோதி", மோகினி, 1951.

6. ந. பிச்சமூர்த்தி, "கண்ணம்மா", இரட்டை விளக்கு, 1967.

7. புரசு. பாலகிருஷ்ணன், "மருந்தையும் மீறி", இரு நெருப்புகள், 1944.

6\. 1. எஸ்.வி. சுப்பையா, "சுப்ஸ்யசீக்கிரம்", ஆனந்த வெள்ளம், 1970.

2. வே. இராமசாமி, "அப்படியும் இப்படியும்", ஏழைப்பெண், 1978.

7. 1. கமலா பத்மநாபன், "சியாமளா", கதைக்கோவை, ப.இ.

2. மு. வரதராசனார், "சியாமளா", கதைக்கோவை, 1959.

3. ருக்மணி பார்த்தசாரதி, "அழகுமயம்", அழகுமயம், 1974.

4. ——————— "அன்புக்கும் உண்டு", ————————.

5. சங்கரராம், "சுந்தரி", காணிக்கை, 1978.

6. எஸ். சத்யநாதன், "நினைவு நிஜமாகிறது", சொல்லத் தெரியாத சொந்தங்கள், 1979.

7. சிவசங்கரி, "மல்லிகாமேரி அதிர்ஷ்டமில்லாதவளா?", இவளும் ஓர் அன்னையே, 1980.

8. எம்.ஜே. இராமலிங்கம், "ஒரு அற்புத பொய்", ஊமைச்சி காதல், 1957.

9. வ.வே. சுப்ரமணிய ஐயர், "கமலவிஜயம்".

10. 1. கு.ப. ராஜகோபாலன், "குரலும் பதிலும்", கனகாம்பரம், 1986.

2. புதுமைப்பித்தன், "ஆண்மை", சித்தி, 1977.

3. லட்சுமி, "பெயரில் என்ன் இருக்கிறது", பெண்ணின் பரிசு, 1958.

11. பி.எஸ். இராமையா, "தரிசனம்". ஞானோதயம், 1954.

12 ஆர். வேங்கடலட்சுமி, "சோகவாழ்க்கை", மோகினி, 1946.

13. 1. ந. பிச்சமூர்த்தி, ''ராகு கேது'', பதினெட்டாம் பெருக்கு, 1944.

2. பராங்குசம், ''கற்பு'', பொல்லாத பாசம், 1965.

3. கு.பா. சேது அம்மாள், ''லட்சியக்காதல்'', உயிரின் அழைப்பு, 1966.

14. தி.ஜ. ரங்கநாதன், ''ராஜத்தின் கூந்தல்'', நொண்டிக்கிளி, 1959.

15. ஆர். திருஞான சம்பந்தம், ''விவாகம்'', கமலா முதலிய சிறுகதைகள், 1941.

16. பராங்குசம், ''பொல்லாத பாசம்'', பொல்லாத பாசம், 1965.

17. கல்கி, ''சுபத்திரையின் சகோதரன்'', சாரதையின் தந்திரம்.

18. சி.சு. செல்லப்பா, ''மஞ்சள் காணி'', செல்லப்பா சிறு-கதைகள் தொகுதி 7, 1977.

19. சி.சு. செல்லப்பா, ''முதல் கடிதம்'', ஸரசாவின் பொம்மை, 1955.

20. தினமணி, 46 ஜோடிகளுக்குத் திருமணம், 18.5 1988. ப. 5.

# இயல் — இரண்டு

## மணமாகாத பெண்களின் பிரச்சனைகள்

சமூகத்தின் இருவிழிகளாக விளங்கிவரும் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாக வாழ்வதே சமுதாய நலனுக்கு உகந்ததாகும். பெண்ணடிமை தீராமல் மண்ணடிமை தீர்ந்ததென மார்தட்டிக் கொள்வதில் பொருளேதுமில்லை. மாறிவரும் காலச்சூழ்நிலை-களிலும் வரதட்சணை என்னும் பெருங்கொடுமை தீர்க்கவியலாப் பெரும் பிரச்சனையாக வளர்ந்து வருகிறது. திருமணச் சந்தையில் விலைபேசப்படும் வியாபாரப் பொருளாகப் பெண் மதிக்கப்படும் நிலை இன்றளவும் நீடித்துக்கொண்டே தான் உள்ளது. வியா-பாரத்தில் கூட பொருள் பெறுபவர்தான் விலைதர வேண்டும். ஆனால் பெண்பிறவியோ பொன்னும் பொருளும் குறைவின்றித் தன் உடன்கொண்டு செல்லவேண்டும்.

சமூகத்தில் திருமணம் ஆனால் மட்டுமே பெண்ணுக்கு வாழ்வு, இல்லை எனில் சமுதாயத்தில் அவள் விலைபோகாத பொருளாகவே விளங்குகிறாள். அழகும் அறிவும் மட்டும் இருந்தால் போதாது; சமூகத்தில் அவளுக்குப் பெரும் அந்தஸ்தும் இருக்க வேண்டும்.

சமுதாயத்தில் கலந்து உறவு வைத்துக்கொள்வதற்கும் அதே சமுதாயத்தை எதிர்த்துப் போராடுவதற்கும் சிறுகதைகளைச் சிறந்த ஆயுதமாகக்கொண்டு அதனைப் பயன்படுத்திய எழுத்-தாளர்களில் பலர் மக்கள் வாழ்வையும் சமூகநியதியையும் ஒரு புதிய கோணத்திலிருந்து பார்வையிட்டு சிறுகதை மூலம் அவற்றை வெளிப்படுத்தியுள்ளனர்.

திருமணமாகாத பெண்கள் எத்தகைய பிரச்சனைகளுக்கு ஆளானார்கள், அவர்களைச் சமுதாயம் எத்தகைய இன்னல்களுக்கு ஆளாக்கியது என்பதனை இவ்வியல் ஆராய்கிறது.

காதல் வாழ்க்கை

செம்புலப் பெயல்நீர் போல் ஒன்றிணைந்துவிடும் அன்புடை நெஞ்சங்களை அகநானூற்றுப்பாடல்களில் காண்கிறோம். ஆனால் காதல் பெரும்பாலும் வெறும் கனவாகவே முற்றுப்பெற்று வந்துள்ளமையைச் சிறுகதைகளில் காணமுடிகின்றது.

சாதி, சமயம், ஜாதகம், பொருளாதார அடிப்படையிலான சமூகத்தகுதி போன்ற தகுதிகளிடையே தோன்றும் ஏற்றத் தாழ்வுகளால் பெற்றோர், சுற்றத்தார் எதிர்ப்பு ஆகியனவே பெரும்பாலும் காதல் தோல்விக்கு காரணங்களாகிவிடுகின்றன. பல்வேறு தகுதி முரண்பாடுகளை ஆயுதங்களாகக் கொண்டு காதல் உறவுகள் துண்டிக்கப்பட்டு அவை தோல்விகளையே தழுவி வந்துள்ளன. அதிலும் குறிப்பாகப் பெண்களே காதல் தோல்வியால் பெரிதும் பாதிக்கப்புட்டு பலி ஆடுகளாக்கப் படுகின்றனர்,

1. காதல் தோல்வி காரணமாகத் தற்கொலை செய்துகொள்ளும் பெண்கள்.[1]

2. திருமணமே செய்துகொள்ளாமல் தனியே வாழும் பெண்கள்.[2]

3. காதலனின் நம்பிக்கைத் துரோகத்திற்குள்ளாகி மனம் உடைந்து வருந்தும் பெண்கள்.[3]

4. பெற்றோரின் வற்புறுத்தலால் காதலனைத் துறந்து மாற்றானுக்கு மனைவியாகி நிம்மதியற்ற வாழ்வுக்குத் தள்ளப்பட்டுத் தவித்திடும் பெண்கள்.[4]

5. பொருளாதாரம், கல்வி; சாதி, சமயம் சமூகத்தகுதி, ஜாதகம் போன்ற குறுக்கீடுகளால் மணவாழ்வுக்கு வாய்ப்பின்றித் துயருக்குள்ளாகும் பெண்கள்.[5]

6. பெற்றோர் எதிர்ப்பால் காதலில் தோல்வியைத் தழுவி வாழும் பெண்கள்,[6]

7. அதிகார வர்க்கத்திற்கு அடிமைப்பட்டு காதல் தோல்வி கண்டு, அதிகாரியின் ஆசை நாயகியாய் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் பெண்.[7]

8. காதலரிடையே உருவான ஊடல் விரிசலாகி உறவே முறிந்து தவிக்கும் பெண்கள்.[8]

9. காதல் தோல்வியால் விபச்சாரத்திற்குத் தள்ளப்படும் பெண்கள்.[9]

10. தம் காதலன் தீயவன் என்பதறிந்து முன்னெச்சரிக்கை உணர்வோடு தாங்களாகவே விலகிக்கொண்ட பெண்கள்,[10]

11. காதலனுடைய முறைப் பெண்ணுக்கு வாழ்வுதர தம் காதலையே தியாகம் செய்து விட்டு வாழும் பெண்கள்.[11]

12. காதல் தோல்வி காரணமாக மனநோய்க்குள்ளாகி மன நோயாளிகளாய் வருந்தும் பெண்கள்.[12]

13. திருமண உறவுக்கு முன்பே கர்ப்பமாகி ஊர் உலகுக்கு அஞ்சி கருச்சிதைவு செய்துகொள்ளும் போது உயிரிழந்த பெண்.[13]

14. கோபங்கொண்ட முறைமாப்பிள்ளையால் கொலை செய்யப் படும் பெண்கள்.[14]

என்றிவ்வாறு பல அவல ஓவியங்களைச் சிறுகதைகள் சித்தரித்துக் காட்டுகின்றன.

1950ஆம் ஆண்டிற்கு முன் எழுதப்பட்ட ஆய்வுக்குக் கிடைத்த எழுபத்தொன்பது சிறுகதைகளில் காதல் மனத்துக்கு இசைவுதர மறுக்கும் பெற்றோரை எதிர்த்துப் பேசித் தங்கள் எண்ணத்தை ஈடேற்றிக்கொள்ளும் ஆற்றலைப் பெண்கள் எவரும் பெற்றிருக்கவில்லை. தாம் கொண்டிருந்த காதலையே கூட வெளி

யிட அஞ்சிய பெண்களைதான் பெரும்பாலும் காணமுடிகின்றது. இதனால் சமுதாயம் காதல் மனத்தை எதிர்த்து வந்துள்ளமையை உணர முடிகின்றது.

1950 ஆம் ஆண்டுக்கும் 1980 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் சிறுகதை மலிந்து காணப்பட்டாலும் பல காதலர்கள் வெற்றிபெற்றும் இருக்கிறார்கள் என்பதையும் அறிய முடிகின்றது.

அஞ்சா நெஞ்சுரத்தோடு தடை பல கடந்து தம் பெற்றோரை எதிர்த்து மணம் புரிந்துகொள்வதையும், பெற்றோரைத் தம்வயப்படுத்தி காதலில் வெற்றிபெறும் பெண்களையும் சிறுகதைகளில்[15] காணமுடிகின்றது.

காதல் மணத்துக்குப் பெற்றோர் எதிர்ப்புத் தெரிவிப்பது என்பது அன்று தொடங்கி இன்றுவரை தொடர்ந்து நீடித்துவரும் தொடர்கதையே ஆகும். பெற்றோர் இருவருள்ளும் தந்தையின் எதிர்ப்பே வலிமைமிக்கதாதக் கதைகளில் ஆங்காங்கே மலிந்து காணப்படுகிறது.

மாறிவரும் காலச் சூழ்நிலைகளில் பெண்கள் படிப்படியாகத் தங்கள் வலிமையை உணர்ந்து திறமையைப் பெருக்கி விழிப்புணர்ச்சியைப் பெற்று வருகிறார்கள் என்பதை அவ்வகாலச் சிறுகதைகள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

**திருமணத்தடைகள் :-**

வரதட்சணை, வறுமை, அழகின்மை, உடல் ஊனம் போன்ற காரணங்களால் பெண்களின் திருமணங்கள் தடைப்படுகின்றன.

ஜாதகம் பார்த்தல், சகுனம் பார்த்தல் போன்ற மூடநம்பிக்கைகளாலும் திருமணங்கள் நிறைவேறாது நின்றுவிடுகின்றன.

1. மாங்கல்ய தோஷம் காரணமாக மனம் தடைப்பட்டுப் போன பெண்[16]

2. மாங்கல்ய தோஷத்தால் திருமணம் நின்றுபோன பெண், நெறிபிறழ்ந்த வாழ்க்கைக்குத் தள்ளப்படுகிறாள். திருமணமாகாமலேயே கர்ப்பமாகி சமுதாயத்திற்கு அஞ்சித் தற்கொலை செய்துகொள்கிறாள்.[17]

3. சகுனம் சரியில்லை என்று திருமணம் நிறுத்தப்படு-கிறது. இதனால் துயருறும் பெண்[18].

இவ்வாறு நின்றுபோகும் திருமணங்களால் தம் நிலையிழந்து அவலத்துக்குள்ளாகும் பெண்களைச் சிறுகதைகள் சித்தரிக்-கின்றன.

வரதட்சணை :

பெண்ணினத்தைப் பற்றியிருக்கும் பல்வேறு பிரச்சனை களில் வரதட்சணைப் பிரச்சனை நச்சு மரமாக வளர்ச்சி பெற்று பலரின் வாழ்வுக்குத் தடைக்கல்லாகியுள்ளது.

''திருமணத்தின்போது மணமகள் நகைகளால் அலங்கரிக் கப்பட்டு அனுப்பப்படவேண்டும். ஆனால் அவற்றின் மதிப்பு, அளவு — இவை எல்லாம் பெண்ணைப் பெற்றவரின் வசதிக்கும் விருப்பத்திற்கும் உட்பட்டவையே".

ஸ்மிருதிகள் வரதட்சணையைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. 'கன்னிகாதானம்' என்று சொல்லப்பட்டிருப்பதால் இவை நிர்பந் திக்கப்படவில்லை".

"பெண் போகுமிடத்தில் சிரமப்படாமல் வாழவேண்டும் என்ற எண்ணத்தால் அடிப்படையில் பொருளாதாரத்தில் மேலோங்கிய குடும்பத்திலிருந்து பிள்ளைகள் தேர்ந்தெடுப்பதில் போட்டிகள் ஏற்பட ஆரம்பிக்க, யார் அதிக பணம் தருவார்களோ அவர்களையே பிள்ளை வீட்டார் நாட வரதட்சணை நன்றாக வேர்விட ஆரம்பித்தது''[19].

வரதட்சணை காரணமாக பெண்கள் அவதியுறும் நிலையைச் சிறுகதைகளில் பார்க்கும்போது, வரதட்சணை கொடுக்க இயலாதவர்களுக்கு வாழ்க்கையே இல்லை என்ற நிலை உருவாகி உள்ளதைக் காணமுடிகின்றது.

1. வரதட்சணையால் பெண்களின் திருமணம் தடைப்படுகின்றது.[20]

2. வாழ்வு அமையாது பெண்கள் துயரில் மூழ்குகின்றனர்.[21]

3. வாழ்க்கையை வெறுத்துத் தற்கொலை செய்துகொள்கின்றனர்.[22]

4. பெண்கள் விலைமகளிராகும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.[23]

வரதட்சணை என்னும் சமுக வழக்கத்தால் விளைகின்ற பல்வேறு தீமைகளையும் அவ்வழக்கத்தால் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகளையும் சிறுகதைகளில் விரிவாகக் காண முடிகிறது.

1950ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெற்றிருந்ததைக் காட்டிலும் 1950ஆம் ஆண்டுக்குப் பின்னரே பெரும்பாலும் சிறுகதைகளில் இப்பிரச்சனை மிகுதியாக இடம்பெற்றுள்ளது. எனினும் சிற்சில வேறுபட்ட போக்குகளையும் காணமுடிகின்றது.

வரதட்சணையால் வாழ்விழந்து நிற்கும் பெண்களைக் காணமுடிந்த போதிலும், சாதி சமயம் போன்ற சமூகக்கட்டுப்பாடுகளைத் தகர்த்துப் புறக்கணித்துவிட்டுப் புரட்சிரகரமாகத் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் பெண்களையும், பாதிக்கப்பட்ட தம் பெண்களுக்கு வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கும் பெற்றோரையும் காண முடிகின்றது.[24]

“ஆங்கில அரசின் ஆதிக்கத்தால் அரசாங்க உத்தியோகம் பார்க்கும் பிள்ளைகளைத் தங்கள் பெண்களுக்குத் தேடிப்பிடித்து

மணம் செய்வதில் ஏற்பட்ட போட்டி மத்திய வகுப்பினரிடையே வரதட்சணை வழக்கு ஆழமாக வேரூன்றக் காரணமாக அமைந்து விட்டது.

வேதங்களில் வரதட்சணை பற்றிய குறிப்பு ஏதும் காணப் படவில்லை. சாஸ்திரங்கள் இதை நிர்ப்பந்தப்படுத்த வில்லை.

மதகுருமார்கள் ஆதரிக்கவில்லை
வரதட்சணை வாங்குவது குற்றம் என்று
அரசு சட்டம்போட்டு தண்டிக்கிறது
ஆனால் இத்தனையையும் மீறி
வரதட்சணை தலைதூக்கிய படிதான் இருக்கிறது[25].

தமிழ்நாட்டில் 1985ஆம் ஆண்டு 12பெண்கள் வரதட்சணைக் கொடுமைக்குப் பலியாகினர். 1986இல் 38 பேராக உயர்ந்த இந்த எண்ணிக்கை 1987இல் 49ஆக உயர்ந்துள்ளது''[26].

இப்புள்ளி விபரத்தைக் கருத்திற்கொண்டு காணும்போது பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமையை உணர முடிகிறது.

**அழகும் — அழகின்மையும் :**

பெண்ணுக்கு அழகு ஒரு பிரச்சனை. அழகாயிருக்கும் பெண் பிற ஆடவரின் தொல்லைகளுக்கு ஆளாக நேரிடுகிறது. அழகில்லாத பெண்களுக்கோ திருமணம் நடைபெறுவதே பிரச்சனையாகிவிடுகிறது.

1. அழகில்லாத காரணத்தால் பெண்களின் திருமணம் தடைபடுகிறது.[27]

2. தாலிகட்டும் நேரத்தில்கூட பெண் அழகாயில்லை என்று கூறி மணமகன் மறுத்துவிடுகிறான்,[28]

3. அறிவுள்ள பெண்ணும்கூட தனக்கு அழகில்லையே என்று வருந்துகிறாள்.[29]

4. அழகின்மையால் எவரும் தன்னைத் திருமணம் செய்து கொள்ள முன்வரவில்லை என உணர்ந்து தன்னை கோயிலுக்கு விளக்கேற்றுபவளாக அர்ப்பணித்துக் கொள்ளுகிறாள்.[30]

5. அழகின்மையை பிறர் குத்திக்காட்ட அவமானத்தால் மனம் நொந்து தற்கொலை செய்துகொள்ளும் பெண்ணின் நிலை.[31]

6. அழகின்மையால் துறவு மேற்கொண்டு கன்னிகாஸ்திரியாக மாறும் பெண்[32].

அழகின்மையால் மாறுபட்ட வாழ்க்கைச் சூழலுக்குள் தள்ளப்படும் பெண்களையும் மனம் வருந்தி மாய்ந்து போன பெண்களையும் சிறுகதைகள் சித்தரிக்கின்றன. அதே வேளையில் அழகே ஆபத்தாக மாறி பெண்களைப் பெருந்துயர்களுக்கு ஆளாக்கும் நிலைகளையும் சித்தரிக்கின்றன.

1. அழகியான வேலைக்காரியால் தன் குடும்பவாழ்க்கைக்குக் குந்தகம் விளைந்துவிடுமோ என அஞ்சி எஜமானியால் வேலைக்காரி வெறுக்கப்படுதல். தொடர்ந்து வேலைபார்க்க முடியாது வெளியேற்றப்படும் நிலைக்கு ஆளாகும் நிலை.[33]

2. கயவர்களிடமிருந்து தன்னைக் காத்துக்கொள்ள தற்கொலை செய்துகொண்டு உயிர்துறக்கும் நிலை.[34]

3. அழகியாக இருப்பதால் பணிபுரியும் இடங்களில் உடன் பணிபுரிவோரால் தொல்லைகளுக்கு ஆளாதல். அழகை அழிக்க முற்படும்போது உயிர் துறக்கும் நிலை.[35]

4. பிரபுக்களால் துன்பங்களுக்குள்ளாகி இறுதியில் காதலனுடன் தப்பித்துக்கொள்ளும் நிலை.[36]

5. தன்னை வஞ்சகத்தால் அடைய நினைப்பவனைக் கொன்று தானும் தன்னைப் பலியிட்டுக் கொள்ளும் நிலை.[37]

அழகும் பெண்களை அல்லல்களுக்கு உள்ளாக்குகிறது. அவர்களின் உடல் அழகு அவர்களின் உயிருக்கு உலைவைத்து விடுகின்றது. திட மனதோடு தம்மைக் காத்துக்கொள்வோரையும், வேறுவழி தென்படாமல் தம்மை மாய்த்துக்கொள்வோரையும், தம் அழகால், உழைத்து வாழும் வாய்ப்பை இழந்து தவிப்போரையும் சிறுகதைகளில் காண முடிகிறது.

வறுமை

சமுதாயத்தில் காணப்படும் மிகப்பெரிய துயரம் வறுமை. ஆண் பெண் இருபாலருமே பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்றாலும் இப்பிரச்சனை பெண்களையே மிகுதியாகப் பாதிக்கிறது.

வறுமையின் பிடியில் சிக்கித் தங்களின் கற்பையே விலை-பேசும் நிலைக்குப் பெண்கள் தள்ளப்படுவதை அறியும்போது வறுமை எந்த அளவில் பெண்களைப் பாதித்துள்ளது என்பதை உணர முடிகின்றது.

1. வறுமைப்பிடிக்குள் அகப்பட்டு அன்றாடம் உணவிற்கே அல்லாடும் நிலை.[38]

2. வறுமையால் கல்வி தடைபடுதல்.[39]

3. வறுமையால் திருமணம் தடைபடுதல்[40]

4. வறுமையால் உடல் ஊனமுற்றோரை, மனப் பாதிப்-புடையோரை திருமணம் செய்துகொண்டு வாழ்வில் நிம்மதியிழந்து அல்லல்படும் நிலை.[41]

5. பிச்சை எடுத்து வயிறு வளர்க்கும் நிலை[42]

6. வீட்டுவேலை செய்யுமிடத்தில் எஜமானியால் கொடுமை-களுக்கு உள்ளாகும் நிலை.[43]

7. வறுமையின் கோரப்பிடியிலிருந்து தப்பிக்கத் தற்கொலை செய்துகொள்ளும் நிலை.[44]

8. கள் விற்று வறுமையின் பிடியிலிருந்து தப்ப முற்படும் மனைவியை விடுத்து அவள் கணவனை காவல் துறையினர் கைதுசெய்துவிட, திரும்பியபின் கணவன் அவமானத்தால் தற்கொலை செய்துகொள்ள விதவை யாகித் தவிக்கும் பெண்ணின் நிலை.[45]

9. வறுமையைப் போக்கி வாழ வேறு வழியின்றி நடிப்புத் தொழிலுக்கு த் தள்ளப்படும் பெண்ணின் நிலை[46]

10. வறுமையால் தாசித்தொழிலுக்குத் தள்ளப்படும் பெண் களின் நிலை.[47]

இவ்வாறாக, வறுமைச் சூறாவளியில் சிக்கி சுழலும் பல்வேறு வகையான துன்பங்களுக்கு உள்ளாகும் பெண்களைச் சிறுகதை கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

**ஊனம்**

பெறுதற்கரியது மானிடப்பிறவி. கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அதனினும் அரிது. அழகும் ஆரோக்கியமும் ஒருங்கே அமையப்பெற்ற பெண்களையே பல்வேறு சமுதாயப் பிரச்சனைகள் சூழ்ந்து நின்று அலைக்கழிக்கும் போது உடல் ஊனமுற்ற பெண்களின் பிரச்சனைகளுக்கு எல்லை காண்பதென்-பது இயலாத காரியம்.

ஊனமுற்ற பெண்களை மணக்க எவரும் முன்வருவதில்லை. அப்படியே மணக்க முன்வரினும் அவர்களைப் பொருளுக்காக மணந்துகொண்டு, பின்னர் பல துயரங்களுக்கு ஆளாக்கி விடுகி-

றார்கள். உடல் ஊனத்தால் தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகி-யும் பிறரால் தாழ்த்தி மதிக்கப்பட்டும் பரிதவிக்கும் பெண்களைச் சிறுகதைகள் சித்தரிக்கின்றன.

1. ஊனத்தால் திருமணம் தடைபடுதல்[48]

2. உடல் ஊனமுற்ற பெண் என்றறியாமல் காதலித்துப் பின்னர் ஊனமுள்ளவள் என்று தெரிந்துகொண்ட பின்காதலன் ஓடி விடுதல்.[49]

3. பார்வையற்ற பெண்ணை முறைமாப்பிள்ளை மணக்க மறுத்ததால் தன்னை மாய்த்துக் கொள்ளுதல்.[50]

4. ஊனமுற்ற பெண் என்று அறிந்தே திருமணம் புரிந்து விட்டு மணம் முடித்த பின் மனைவியைக் கணவன் பிரிதல் அதனால் ஊனமுள்ள மனைவி தற்கொலை செய்து கொள்ளுதல்.[51]

5. ஊனமுள்ள பெண்ணை பெற்றோரே வெறுத்து ஒதுக்கியதால், ஆசிரமத்தில் சேர்த்து கல்விபயின்று மேல் நிலைக்கு வரும் காலகட்டத்தில் வெறுத்தொதுக்கிய பெற்றோரே அவளை நாடிவர அப்பெண்ணே பெற்-றோரை வெறுத்து ஒதுக்கி விடுகிறாள்.[52]

உடலால் ஊனமுற்றவர்களும், வாழவேண்டும் என்கிற விருப்பும், உணர்வும் உள்ளவர்கள்தாம். ஊனமுற்ற பெண்களும் சமுதாயத்தின் அங்கங்களே என்று எண்ணிப்பாராமல் ஒதுக்கித் தள்ளிவைக்கும் நிலையை சிறு கதைகளில் உணர முடிகிறது.

பலாத்காரம்

துணை ஏதுமின்றி ஒரு பெண்ணால் என்று தனியாக நடமாட முடிகிறதோ அன்றுதான் நாம் உண்மையாகவே சுதந்

திரம் பெற்றவர்கள் ஆவோம் என்றார் காந்திமகான். சமுதாயத்தால் நடைமுறை நிலைகூட பாதுகாப்பற ஒன்றாகவே தொடர்ந்து கொண்டுள்ளது. பாதுகாப்பற்ற பெண்கள் பலாத்காரத்திற்குட்படுத்தப்பட்டுப் பல்வேறு பிரச்சனைகளுக்குள்ளாவதைச் சிறுகதைகள் சித்திரிக்கின்றன.

1. பெண்கள் பலாத்காரத்திற்குட்படுத்தப்பட்டு கொல்லப்படுதல்.[53]

2. பெண்ணைப் பலாத்காரத்திற்குட்படுத்தி நிர்பந்தத்தின் பேரில் அவளையே மணந்துகொள்ளுதல்.[54]

3. ஆசிரியரால் பலாத்காரத்திட்குட்பட்ட மனைவியை அவ் ஆசிரியரது மகனே மணந்து கொள்ளுதல்.[55]

4. ஆசிரியர் மாணவியை பலாத்காரத்திற்குட்படுத்துதல்.[56]

5. பலாத்காரத்திற்கு ஆட்படும் பெண்கள் தற்கொலை செய்து கொள்ளுதல்.[57]

6. முதியவரை மணந்து வாழும் பெண் அவ்வீட்டு வேலைக்காரனால் பலாத்காரத்திற்கு ஆளாதல்.[58]

7. பணியாற்றுகின்ற இடங்களில் பலாத்காரத்திற்கு உட்படுதல்.[59]

8. கல்லூரிக்குச் செல்லும் வழியில் பலாத்காரத்திற்கு ஆளாதல்.[60]

9. கரும்பு ஒடிக்கச் சென்ற பெண் கரும்புத்தோட்டத்தில் பலாத்காரத்திற்கு ஆட்படுதல்.[61]

10. கயவனிடம் சிக்கிக்கொண்ட பிச்சைக்காரி தன்னைக் காத்துக்கொள்ள முயலும்போது தன் கண்களை இழத்தல்.[62]

11. பலாத்காரத்திற்கு உட்பட்ட பெண்கள் தம்மை முற்றிலும் அறிந்து கொள்ளும் ஆண்மக்களைத் திருமணம் செய்துகொள்ளுதல்.[63]

12. பலாத்காரத்திற்கு ஆளான பெண்ணை காதலன் மணக்க மறுத்துவிடுதல்.[64]

பெண்களின் உணர்வுகளைப் பொருட்படுத்தாது பல்வேறு வகையான சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கைதிகளாக்கி அவர்களின் தூய்மைக்கு மாசு ஏற்படுத்தும் நிலை சமுதாயத்தில் தொடர்ந்து வருவதை உணரமுடிகின்றது.

பெண் மென்மையானவள், பலவீனமானவள் என்னும் உணர்வில் ஊறிப்போன ஆண்கள் வெகு இலகுவாக பலாத்காரத்திற்கு முற்படுகிறார்கள். விலங்கினும் கீழாக நடந்து கொள்கின்றனர். பலாத்காரத்திற்குள்ளாகி பாதிக்கப்படும் பெண்களை சமூகம் இழி பிறவிகளாகக் கருதி ஒதுக்கிவைத்து வேடிக்கை பார்க்கும் விந்தை குணம் இன்னும் உள்ளது.

இன்றைய நிலையில் இப்பிரச்சனை சமுதாயத்தைவிட்டு முற்றிலும் அகன்று விட்டதாகக் கொள்ள வாய்ப்பில்லை. எனினும் உடலாலும் உள்ளத்தாலும் வலிமை பெற்றுவரும் பெண்கள் எதிர் வரும் காலங்களில் இப்பிரச்சனைக்கு முடிவு காண்பார்கள் எனக் கருதலாம்.

**ஊராரின் அவதூறு :**

உலக அறிவு பெறாமையாலும் விரிந்த மனப்பாங்கின்மையாலும் தம்மைச் சுற்றி வாழ்வோர் எவரைப்பற்றியேனும் அவதூறு பேசிக் காலம்கழிப்பது ஒருசிலருக்குப் பொழுதுபோக்காக அமைந்து விடுகிறது.

1. ஒரு பெண் பிற ஆடவருடன் பேசிப்பழகினால் அவள் மீது வீண்பழி சுமத்தி அவளது மனநிம்மதியைக் குலைத்தல்.[65]

2. திருமணம் நிச்சயமான நிலையில் மணமகனின் தந்தை இறந்துபோக மணப்பெண் இராசியில்லாதவள் என்று ஊரார் ஏசி அதன் விளைவாகத் திருமணம் தடைபடுதல்.[66]

3. ஊராரின் உண்மைக்குப் புறம்பான பழிச்சொற்களைத் தாங்கமாட்டாது தற்கொலை செய்து கொண்டு பெண் உயிர்துறத்தல்.[67]

பேதமின்றிப் பழகும் ஆண் - பெண் இருபாலர்க்கிடையே உள்ள நட்பைக் களங்கப்படுத்திப் புறம்பேசும் ஊராரின் தீச்செயல்களால் அவர்களின் வாழ்வே நாசமாகிவிடும் நிலை உருவாகிவிடுகிறது.

பெண்களே பெண்களைப் பற்றிப் புறம்பேசுவதில் பெரிதும் ஆர்வம் காட்டுகின்றனர். பொதுநோக்கும் கல்வியறிவும் பெண்களிடம் செழித்து வளராமையே இப்பிரச்சனைக்கு வாய்ப்பாக அமைந்து விடுவதை உணர முடிகிறது.

## கட்டாயத் திருமணம்

பெண்களின் விருப்பு வெறுப்புகளைக் குறித்துச் சற்றும் எண்ணிப்பாராமல் பெற்றோர் தங்கள் விருப்பப்படி கட்டாயத் திருமணம் செய்து வைத்துக் கடமையைக் கழிக்கும் நிலைகளைச் சிறுகதைகள் சித்தரிக்கின்றன. விருப்பமில்லாத மணவாழ்வுக்குத் தள்ளப்பட்டு நிம்மதியின்றி வாழ்வைக் கழிப்பதையும், சிலர் தற்கொலை செய்துகொண்டு மாண்டு போவதையும் சிறுகதைகள் குறிப்பிடுகின்றன.

1. தந்தையே தான்பெற்ற பெண்ணை மணக்க விரும்பும் தகாத செயல்குறித்து நடேச சாஸ்திரிகளின் 'நான்கு சகோதரிகள்' கதை சித்தரிக்கின்றது.[68]

2. தாம் விரும்பாத ஒருவனுக்கு பெற்றோர் மணம் செய்விக்க முயல, மனம் உடைந்த பெண் தற்கொலை செய்து கொள்தல்.[69]

3. மரணப்படுக்கையில் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கும் தாயின் விருப்பத்தை நிறைவேற்றி குடிகாரனை மணந்து சில நாட்களிலே விதவையாகி வாடும் நிலை.[70]

4. பெற்றவளின் பிடிவாதத்தால் முதியவனான மாமனை மணந்து மனநிம்மதியின்றி வாழும் நிலை.[71]

1950 ஆம் ஆண்டுக்கு முன் ஏழு சிறுகதைகளிலும், 1960-1980 ஆண்டுகளுக்கு உள்ளிட்ட சிறுகதைகளில் ஐந்திலும் கட்டாயத் திருமணம் இடம் பெற்றுள்ளது.

நடைமுறையில் கட்டாயத் திருமணம் பெருமளவில் குறைந்துள்ளது எனலாம். தம் விருப்பத்துக்கு எதிராக திருமண ஏற்பாடுகள் செய்ய முற்படின் பெற்றோரிடம் துணிந்து மறுப்புக்கூறித் தங்கள் விருப்பத்திற்கேற்ப வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் அளவிற்குச் சமுதாயத்தில் பெண்கள் விழிப்புணர்ச்சி பெற்றுவருவதைக் காண முடிகிறது.

மூடநம்பிக்கை

இறைவழிபாடு மக்களிடையே நிலவிவரும் பன்பாட்டு மரபுகளின் வெளிப்பாடாகவே விளங்கி வருகிறது. அறிவியல் துறையில் குறிப்பிடத்தக்க அளவில் பெரும் முன்னேற்றம் கண்டுவரும் இந்நாளிலும் கடவுளின் பெயரால் கடைபிடிக்கப்பட்டுவரும் சில மூடப்பழக்க வழக்கங்கள் சமூகத்தில் வேரூன்றி நின்று நிலவி வருவதைக் காணமுடிகிறது.

தெய்வம், கன்னிப்பெண்ணை பலி கேட்பதாகக் கூறும் பூசாரியின் சொல்லைக்கேட்டு தன் பெண்ணைப் 'பலி கொடுக்கத் துணிகின்ற பெற்றோரை 1950 ஆம் ஆண்டு காலகட்டச் சிறுகதைகளில் ஒன்று சித்திரிக்கின்றது.[72]

மூடநம்பிக்கையில் மூழ்கிக்கிடக்கும் சமுதாயம் தெய்வத்திற்குப் பலியிடத் தகுந்த பொருளாகக் கன்னிப்பெண்ணின் உயிரைக் கருதிவந்த நிலை அக்காலத்தில் இருந்து வந்திருக்கிறது

என்பதை உணர முடிகின்றது. இந்நிலையை பெ. கோ. சுந்தர் ராஜன் தம் சிறுகதை ஒன்றில் சித்தரித்துள்ளார்.

1950ஆம் ஆண்டுக்கு முன்காலத்திய சிறுகதைகளில் ஒன்றில் மட்டுமே இப்பிரச்சனை இடம்பெற்றுள்ளது. அதற்குப்பின் 1950 ஆம் ஆண்டு முதல் 1980ஆம் ஆண்டு வரையுள்ள காலகட்டச் சிறுகதைகளில் ஆய்வுக்குக் கிடைத்தமட்டில் இப்பிரச்சனை இடம் பெறவில்லை.

**கௌரவம்**

அழகும் அந்தஸ்தும் நிரம்பப்பெற்ற பெண்ணை வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொள்ள முற்படும் ஆடவன் அவளுக்கு சம உரிமை அளிப்பதை விரும்புவதில்லை. அதனால் அவர்களது சமூகக்கௌரவம் ஏதோ ஒருவகையில் பாதிக்கப்படுவதாகக் கருதப் படுகிறது. இதரப் பிரச்சனைகளைப் போலவே கௌரவம் பார்க்கும் பிரச்சனையும் பெண் இனத்தின் உரிமைகளைப் பறிக்கும் பெரும் பிரச்சனையாகத் திகழ்ந்து வந்திருக்கிறது.

கௌரவப் பிரச்சனையைக் கருவாகக் கொண்டு ஆர். வேங்கடலெக்ஷ்மி மோகினி என்றும் சிறுகதையைச் சித்திரித் துள்ளார்.

காதலர் இருவரும் ஓவியர்கள். இருவரும் பரிசுப்போட்டிக் காக ஓவியம் வரைகின்றனர். காதலியின் ஓவியம் சிறப்பாக அமைந்துவிடுகிறது. அவளது ஓவியத்திற்குப் பரிசு கிடைத்து விட்டால் எங்கே தனது கௌரவத்துக்கு இழுக்கு நேர்ந்துவிடு மோ எனக்கருதி அந்த ஓவியத்தை அழித்துவிடச் சொல்கிறான். அதன்படியே காதலியும் செயல்படுகிறாள்.

தம் காதலன் மனம் வருந்தக்கூடாது என்பதற்காகத் தங்களின் விருப்பங்களையும் திறமைகளையும் அழித்துக்கொள்ளும் மகளி ரைப்பற்றி அறியும்போது 'கௌரவப்பிரச்சனை' பெண்ணை எந்த அளவிற்கு பாதித்துள்ளது என்பது புலனாகிறது.

கௌரவம் என்கிற போர்வையில் பெண்ணின் பெருந்திறமைகளும் ஆற்றல்களும் மூடிமறைக்கப்படுவதையும், அவர்களது நியாயமான பல ஆசைகளும் நிராசைகளாக ஆக்கப்பட்டு வருந்திய நிலையும் 1950 ஆம் ஆண்டிற்கு முன் உள்ள சிறுகதைகள் தெளிவுபடுத்துகின்றன.

நடிகை

பல்வேறு கலைகளுள்ளும் நாடகக்கலையும் அதனைத் தொடர்ந்து திரைப்படக்கலையும் பெருவளர்ச்சி பெற்றுத் திகழ்கிற காலகட்டம் இது. புகழும் பொருளும் ஒருசேர ஈட்டிக்கொள்ள வாய்ப்பும் வசதியும் மிக்க தொழிலாக நடிப்புத்தொழில் விளங்கினாலும் சமூகத்தில் இத்துறையில் ஈடுபட்டுள்ள கலைஞர்களைப் பற்றிய மதிப்பீடு உயர்வானதாக இருப்பதில்லை. நடிகை என்றாலே அவள் நல்ல பெண்ணாக விளங்கிட முடியாது என்கிற உணர்வே சமுதாயத்தில் வேரூன்றி உள்ளது.

நடிப்புத் தொழிலை மேற்கொண்டு வந்த பெண்களிடையே எழுந்த பிரச்சனைகளைச் சிறுகதைகள் சித்தரிக்கின்றன.

1. நடிகை என்பதால் காதலனின் பெற்றோர் திருமணத்திற்கு மறுப்பு தெரிவித்தல். மணவாழ்வு கிட்டாமல் நிம்மதியிழந்த பெண்களின் நிலை. மனம் வெறுத்து தற்கொலை செய்து கொள்ளும் நிலை.[73]

2. அரசியல் தலைவர்கள், தயாரிப்பாளர் மற்றும் உடன் பணியாற்றுபவர்கள் வாயிலாகத் தொல்லைகளுக்குள்ளாதல்[74]

3. குடும்பப் பெண்ணாக வாழவேண்டுமென்ற விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள இயலாத நிலை,[75]

4. பலரது இழிவான கற்பனைகளுக்கு ஆளாதல்.[76]

பிற தொழில்களில் ஈடுபட்டிருக்கும் பெண்களைக் காட்டிலும் நடிப்புத்துறையில் ஈடுபட்டு உழைத்திடும் பெண்களுக்கு பேரும் புகழும் பெரும் வருவாயும் கிடைத்த போதிலும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பிறவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டது எனலாம்.

நடிப்புத்தொழிலில் ஈடுபடும் இருபாலருள்ளும் பெண்ணே பெருந்தொல்லைக்கு உள்ளாகிறாள். நடிகையைத் தம் விருப்பம் போல் பயன்படுத்திக் கொள்ளவே சமூகத்தில் பெரும் அந்தஸ்து வகிக்கும் பிரமுகர்கள் விழைகிறார்கள். சமுதாயத்தின் கண்ணோட்டமும் இவ்வாறே உள்ளது என்பதையும் சிறுகதைகள் மூலம் அறியமுடிகிறது.

தாசிகுலம்

குலப்பிறப்பின் காரணமாகவே நெறிபிறழ்ந்த வாழ்க்கைக்கு இலக்காகித் தவிக்கும் தாசிகுலப் பெண்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளைக் கருவாகிக் கொண்டு பல சிறுகதைகள் புனையப்பட்டுள்ளன. நெறியற்ற வாழ்க்கை முறைகளால் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டும், நிறைவேறாத காதலில் அலைக்கழிக்கப்பட்டும், நிலையில்லாத காதலில் நிலை தடுமாறியும் பிரச்சனைகளை எதிர்கொள்ள முடியாமல் தாசிகுலப்பெண்கள் அனுதாபத்திற்குரியவர்களாகத் தோற்றமளிக்கிறார்கள்.

1. தாசிக்குலத்தில் பிறந்தவள் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்று தாய் தடைவிதித்துத் தன் மகளும் குலத்தொழிலில் ஈடுபட வற்புறுத்துதல்.[77]

2. தாசித்தொழிலை அறவே வெறுத்து காதலனோடு பண்பான வாழ்க்கை மேற்கொள்ள எண்ணியும் முடியாத நிலை.[78]

3. தாசிகுலப்பெண் நன்முறையில் வளர்க்கப்பட்டும் குலப் பிறப்பின் காரணமாகத் திருமணம் தடைபடுதல்,[79]

4. பெற்ற தாயை இழந்த பெண் தாசி ஒருத்தியால் ஒழுக்கத்தோடு வளர்க்கப்பட்டும் அவளைத் திருமணம் செய்துகொள்ள எவரும் முன்வராத நிலை.[80]

5. விலைமாது திருமண வாழ்வை விரும்பி பைத்தியத்தை மணந்துகொள்ளும் நிலை.[81]

தாசிகுலத்தில் பிறந்த பெண்கள் தங்களுக்கென்று தனிவாழ்க்கையைப் பற்றியோ விருப்பு வெறுப்புக்களைப் பற்றியோ சுதந்திரமாகச் சிந்திக்கக்கூட அனுமதிக்கப்படவில்லை. தாசிகுலத்தில் பிறந்த பெண் அவ்வாழ்வை வெறுத்து தூய்மையான வாழ்வை அமைத்துக் கொள்ள முற்பட்டாலும் அவளைப் பெற்ற தாயேகூட அவளுக்குத் துணை நிற்பதில்லை. பொது மகளாய் வாழ்ந்து பொருளீட்டித் தரவேண்டும் என்றே பெற்றவளும் விரும்புகின்ற நிலை இருந்து வந்திருக்கிறது என்பதை சிறுகதைகள் உணர்த்துகின்றன.

## ஆய்வின் சாராம்சம்

1. வரதட்சணை கொடுக்கவியலா நிலையில் பெண்களின் திருமணங்கள் தடைப்படுகின்றன. பெண்கள் தற்கொலை முடிவுக்குச் செல்லும் அளவுக்கு வரதட்சணைக் கொடுமை தன் ஆளுகையை நிலைநிறுத்தி உள்ளது. திருமணம் தடைப்பட்டு பிரச்சனைகளுக்குள்ளாகும் பெண்கள் வரதட்சணையை வலியுறுத்தாத மாப்பிள்ளைகளைச் சாதி சமயங்களைக் கடந்து மணம் செய்து கொள்கின்றனர்.

2. சாதி, சமயம், ஜாதகம், பொருளாதாரம், கல்வி ஆகிய தகுதிகளிடையே தோன்றும் ஏற்றத்தாழ்வுகளே பெரும்பாலும் காதல் தோல்விக்குக் காரணங்களாகின்றன.

3. ஊனமுள்ள பெண்களை மணக்க எவரும் முன்வருவதில்லை.

4. வறுமையின் காரணமாக பெண்களின் கல்வி, திருமணம் போன்றவை தடைப்படுகின்றன.

5. ஊராரின் அவதூறுகளால் பல பெண்களின் வாழ்வு நாசமாக்கப்படுகின்றது.

6. கடவுளின் பெயரால் பெண்களின் உயிர் 'பலி' இடப்படுகிறது.

7. கட்டாயத் திருமணங்களால் பெண்களின் வாழ்க்கையில் நிம்மதியில்லை.

8. கௌரவம் என்ற பெயரில் பெண்களின் விருப்பங்களும் திறமைகளும் வெளிப்படுத்தவியலா வண்ணம் முடக்கி வைக்கப்படுகின்றன.

9. நடிகை என்றால் அவள் ஒழுக்கமுடையவளாக இருக்க முடியாது என்கிற உணர்வு சமுதாயத்தில் வேரூன்றி உள்ளது.

10. தாசிகுலத்தில் பிறந்த பெண்களைக் குலப்பிறப்பின் காரணமாக எவரும் மணக்க முன்வருவதில்லை. அவர்கள் மற்றவர்களைப் போல குடும்பவாழ்க்கை வாழ எண்ணியபோதும் சமுதாயம் அனுமதிக்கவில்லை. மக்கள் பிரதிநிதிகளால் ஏற்படுத்தப்பட்ட சட்டம்கூட சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பது யதார்த்த நிலை.

## குறிப்புக்கள்

1\. 1. கு.பா. இராஜகோபாலன், ''கதைக்காரன் கர்வம்''. புனர் ஜென்மம், 1945.

2\. ஆர். வேங்கடலெட்சுமி, ''ரேணுகா'', மோகினி, 1946,

3\. பி.சி. கணேசன், ''ஆசை மாறாத அழகி'' பாவமன்னிப்பு.

4\. புதுமைப்பித்தன், ''இந்தப்பாவி'', சித்தி, 1977.

5\. மௌனி, ''பிரபஞ்சகானம்'', அழியாச்சுடர்.

6\. ந. பிச்சமூர்த்தி, ''இரட்டை விளககு'', இரட்டை விளக்கு, 1967.

7, ந. பிச்சமூர்த்தி, ''மீனலோசினி'', பதினெட்டாம் பெருக்கு, 1944.

8\. புதுமைப்பித்தன்; ''புதிய நந்தன்'', சித்தி, 1977.

9\. வ.வே. சுப்ரமணிய ஐயர், ''மங்கையற்கரசியின் காதல்''; மங்கையற்கரசியின் காதல்.

10, கே. வெங்கடாசலம், ''நாவல் மரம்''. கதைக்கோவை

11\. பி.ஸ்ரீ. ''ராஜமல்லிகை'', கதைக்கோவை.

12\. பூவை.எஸ். ஆறுமுகம், ''கறுப்புக்குயில்''

13\. இதயன். ''பிள்ளை விடு தூது'' காந்தியபெண் 1965.

14\. கோமதி சுவாமிநாதன், ''ஐயனார் கோயில் சுனை'', விருந்தாளி, 1967,

15\. லட்சுமி, ''சமர்ப்பணம்'', பெண்ணின் பரிசு, 1968.

16. கல்பனா, ''ஊஞ்சல் கிளி'' ஊஞ்சல்கிளி, 1966.

17. மதுரைச்சிவம், ''பூங்கோதை'', விதிசிரித்தது, 1967.

18. கோவி மணிசேகரன். ''நர்ஸ் நந்தினி'', இதயங்கள், 1961.

19. குமாரி மணியன், ''தேவியின் சாபம்'', ஐம்பது வருட ரகசியம், 1968.

20. குமாரி மணியன், ''காகிதப்பூ'', ஐம்பது வருட ரகசியம்,

21. குமாரி மணியன் ''காட்டு ராஜா''. ஐம்பது வருட ரக-சியம்' 1968,

22. விந்தன், ''பத்தினித் தெய்யம்'', முல்லைக்கொடியாள். 1964.

23. வி.எஸ். சுப்பையா, ''ஆனந்த வெள்ளம்'', ஆனந்த வெள்ளம் 1970.

24. தாமரைக்கண்ணன், ''திங்கட்கிழமை'' ஏழுநாள், 1977.

25. தாமரைக்கண்ணன், ''வெள்ளிக்கிழமை'', ஏழுநாள், 1977.

26. பழநிவேலு, ''காதற்கிளியும் தியாகக் குயிலும்'', காதற்கிளியும் தியாகக் குயிலும், 1977.

27. கே.சி.எஸ். அருணாசலம், ''கால வெள்ளம்'', பூர்வீகச் சொத்து, 1965.

28. கவிப்பித்தன், ''ஊமைவிழிகள்'', சொல்லத் தெரியாத சொந்-தங்கள், 1979.

29. கண்ணதாசன், ''எங்கே நீயோ நானும் அங்கே'', செய்திக் கதைகள்.

30. ———————, ''உதிர்ந்த மலர்'', சிறுகதைமஞ்சரி.

31. சேஷையா, 'சினிமா நடிகைமகளின் டைரி'', 1980.

32. கே.எஸ். லட்சுமணன், ''அழகு மயக்கம்'', சிற்பமும் சித்திரமும், 1965.

33. எம்.எஸ். பாண்டியன், ''ஒரு நட்சத்திரம் மின்னுகிறது'', ஒரு நட்சத்திரம் மின்னுகிறது, 1977.

34. எம்.எஸ். பாண்டியன், ''அவன் இல்லை அவளும் இல்லை'', ஒரு நட்சத்திரம் மின்னுகிறது, 1977.

35. தேவபாரதி, ''குற்றவாளியைத் தேடி'', தத்துவ தரிசனம், 1974.

36. பிரகாஷ், ''நாகம்'', அங்கிள், 1971.

37. ஏ.எஸ். ராகவன், ''சலனம்'', அன்பின் வழி, 1956.

38. ———————, மோகினியின் காதல், மனித சுபாவம்.

39. ———————, ————————— அவள் காதல்.

40. ஜியார்வி, ''மங்கல தீபம்'' வாடிய மலர், 1977.

41. ஜான்லோப்பஸ், ''மணம்வீசிய கள்ளி மலர்'', சொல்லத் தெரியாத சொந்தங்கள், 1979.

42. பிரதிபாராஜகோபாலன், ''கண்கள்'', அயல் மகரந்தச்சேர்கை, 1981.

43. பிரதிபாராஜகோபாலன், ''கடவுளுக்குக் கருணை உண்டா?'', அயல் மகரந்த சேர்க்கை, 1980.

44. பாலசுப்பிரமணியன், ''அணையாவிளக்கு'' பாண்டிய நாட்டுப்பாவை, 1971.

45. பாலசுப்பிரமணியன், ''பாண்டிய நாட்டுப்பாவை'', பாண்டிய நாட்டுப்பாவை, 1971.

46. பாலசுப்ரமணியன் "பணத்திமிர்" பாண்டிய நாட்டுப் பாவை, 1971.

47. தாமரைக்கண்ணன், "கொடிவழி", அறுசுவை, 1979.

48. வசுமதி ராமசாமி, "காவிரியில் கலந்த காதல்", காவிரியில் கலந்த காதல், 1968.

49. ரா. பே. குருசாமி, "பிரைமோர்", இடமதிப்பு, 1962.

50. சியெஸ்ஸார், "சுருதிபேதம்", மேனகா, 1974.

51. மு. செல்வராஜன், தெய்வம் நின்று கொல்லும், 1979.

52. சுந்தரேசன், "காதற்பலி", வண்டிக்காரன்.

53. கரந்தைகணேசன், "பகடை", வீடும் வெளியும், 1971.

54. கரந்தைகணேசன், "கழைக்கூத்தி" வீடும் வெளியும், 1971.

55. திருச்சிபாரதன், "இங்கே ஒரு லைலா — மஜ்னு, அழியா ஓவியம், 1977.

56. நா. பார்த்தசாரதி, "ஆனால் ... ?" இது பொதுவழி அல்ல. 1979.

57. கி. ராஜேந்தின், "மாணிக்கம்" தொடர்வாழ்க்கை, 1966.

58. மு. செல்வராஜன், தெய்வம் நின்று கொல்லும், 1979.

59. கர்ணன், "ஊனம்", கனவுப்பறவை, 1964.

60. பெ. தூரன், "சாரதாவின் காதல்", பிள்ளை வரம், 1945.

2. 1. கு. ப. ராஜகோபாலன், "புனர் ஜென்மம்", புனர் ஜென்மம், 1945.

2. கு. ப. ராஜகோபாலன், "தனபாக்கியத்தின் தொழில்", புனர் ஜென்மம், 1945.

3. கு. ப. ராஜகோபாலன், ''நினைவு முகம் மறக்கலாமோ'', புணர்ஜென்மம், 1945.

4. ஆர் வேங்கடலெட்சுமி, ''சித்ரா'', மோகினி, 1946.

5. ஆர் வேங்கடலெட்சுமி, ''அடிமையின் வஞ்சம்'' மோகினி, 1946.

6. ஆர். திருஞான சம்பந்தம், ''ராஜ்யஸ்ரீ'', கமலா முதலிய சிறுகதைகள், 1941.

7. உஷா ரகுநாதன், ''மார்க்கண்டேயன்'', விமானம் ஓட்டினேன், 1969.

8. தாழம்பேடு கவிப்பித்தன் (தொ. ஆ.) ''மோகனா ஒரு காவியம்'' உள்ளத்தின் கதவுகள், 1979.

9. சோமு, ''வள்ளியின் கணவன்'', மஞ்சள் ரோஜா, 1954.

10. பெ. தூரன், ———— ''பிள்ளை வரம்'' 1945.

11. தி.ஜ. ரங்கநாதன், ''நொண்டிக்கிளி'', நொண்டிக்கிளி, 1959.

12. புதுமைப்பித்தன், ''மனநிழல்'', அன்று இரவு, 1954.

13. கு.ப. ராஜகோபாலன், ''வீரம்மாளின் காளை'', கனகாம்பரம், 1986.

14. தி.ஜ. ரங்கநாதன், ''நாகரத்தினம்'', நொண்டிக்கிளி, 1959.

15. சோமு, ''வள்ளியின் கணவன்'' மஞ்சள் ரோஜா, 1954.

16. அகிலன், ''குறத்தி'', ஆண் — பெண், 1944.

17. பத்மநாபன், ''கிழிந்த மணி'', கதைக்கோவை பதிப்பு இல்லை.

18. சோமு, "கடலும் கரையும்", கௌதகானம், 1955.

19. வைத்தியலிங்கம், "மூன்றாம் பிறை", கதைக்கோவை, 1940.

20. பி.வி.ஆர்., "பாருவின் சத்திரம்", முதல் விளக்கு, 1968.

21. சேத்தூர் கூத்தன், "அன்பின் அழைப்பு", சோலை வனத்திடையே 1967.

22. கர்ணன், "மறுபடியும் விடியும்" மறுபடியும் விடியும், 1968.

23. கமலா விருத்தாசலம், "அவனும் அவளும்", காசுமாலை.

24. கோவி. மணிசேகரன், "இதயங்கள்", 1961.

25. வசுமதிராமசாமி, "சிக்கலில் ஒரு சிக்கல்", காவிரியில் கலந்த காதல் 1963,

26. அருள் நிதி, "கூட்டுக்குஞ்சு", கூட்டுக்குஞ்சு,

27. ஜெகசிற்பியின், "அசுரவித்து", அஜநயம், 1972.

28. ——— "அவள் ஒரு இயந்திரம்"

29. நா. பார்த்தசாரதி, "நெருப்புக்கனிகள்", நெருப்புக்கனிகள், 1963.

30. மாரி அறவாழ், "சுமை", கண்ணுக்குக் கண்ணாக, 1977.

31. கர்ணன், "வாழ்க்கைக்கனவு", மறுபடியும் விடியும், 1964.

32. கலைமணி, "ஒரு காதல் கதையின் முடிவுரை", ஸ்வப்ன புஷ்பங்கள், 1976.

33. ரா. போ. குருசாமி, "பிரைமோர்", இடமதிப்பு, 1962.

34. அப்பாஸ், "காதல் எங்கே"? தெய்வங்கள், பதிப்பு இல்லை.

35. வையவன், "மறதி", செண்பக மரங்கள், 1977.

36. பாலகுமாரன், ''இருட்டு இடம் மாறிக்கொண்டிருக்கிறது'', ஏதோ ஒரு நதியில், 1980.

37. ———— "துரோகி'', மனித சுபாவம்,

3.

1. சி.என். அண்ணாதுரை "திருமலை கண்ட திவ்ய ஜோதி", அண்ணாவின் சிறுகதைகள், 1946.

2. ந. வீரராகவன், "அவள் சாபம்'', கிராம ஊழியன், 1946.

3. கு. அழகிரிசாமி, ''விட்ட குறையைத் தொட்டகுறை'', சிறப்புச் சிறுகதைகள், 1967.

4. தமிழ்ஒளி, ''அம்மா", சாக்கடைச்சமுதாயம், 1952.

5. ரா. கி. ரங்கராஜன், ''கன்னி'', 1959.

6. வை. மு. கோதைநாயகி அம்மாள், "காலச்சக்கரம்", கதைக் கோவை,

7. பெ. தூரன், "உரிமைப்பெண்", பிள்ளைவரம்.

8. ரா. கி. ரங்கராஜன், ''முற்பிறப்பு'', பல்லக்கு, 1959.

9. பூவை. எஸ். ஆறுமுகம், ''தாம்பத்யம், தாய்வீட்டுச் சீர், 1967.

10. ரசவாதி, ''வழிநடுவில்'', ஆசையின் நிழல், 1967.

11. வாசவன், "நிழல்", அனிச்சம்பூ, 1965.

12. ராதா வீரண்ணன், "இருவரும் காதலித்தார்'' ஏனிந்தக் கோபம், 1965.

13. சௌரி, "தர்மதாசி", நாழிக்கிணறு, 1967.

14. க. சோமசுந்தரம், ''மகிழம்பூ'', ஆய்ர்பாடி, 1968.

15. அ. முத்துலிங்கம், ''உன்மத்தராயிருந்தோம்'', அக்கா, 1964.

16. எஸ் சங்கரன், ''பிராயச்சித்தம்'', அன்னை, ப.இ.

17. பூவை. எஸ். ஆறுமுகம், ''வழிமாற்றம்'', கறுப்புக்குயில்.

18. ………… ''கோணங்கள்'', கோணங்கள்,

19. எஸ்.வி. சுப்பையா, ''ஆனந்தவெள்ளம்'', ஆனந்த வெள்ளம், 1970.

20. எஸ்.வி. சுப்பையா, ''மதுவிலக்கு'', ஆனந்தவெள்ளம், 1970.

21. என்.ஏ. வேலாயுதம், ''பரிசுச்சீட்டு'' பரிசுச்சீட்டு ப.இ.

22. பொன். சௌரிராஜன், ''மதகு'', கதைமலர்கள், 1977.

23. சுஜாதா, ''ஒரே ஒரு வரம்'', நகரம், 1974.

24. கர்ணன், ''மறுபடியும் விடியும்'', மறுபடியும் விடியும், 1968.

25. கோதா பார்த்தசாரதி, ''கடைசியாக ஒரு வார்த்தை''.

26 எம். எஸ். பாண்டியன், ''ஒரு நட்சத்திரம் மின்னுகிறது'', ஒரு நட்சத்திரம் மின்னுகிறது. 1977.

27. மு. மேத்தா, ………… அவள் ஒரு சிறுகதை, 1976.

28. ஜியசர்வி, ''கடமை'', வாடியமலர், 1977.

29. எல்லார்வி, ''பிரஹரி'', மங்கலதீபம், 1972.

30. ஜோதிர்லதாகிரிஜா, ''எனக்கும் லவ் பண்ணத்தெரியும்'', அடைக்கலம், 1980.

31. சிவசங்கரி, ''எனக்கு அந்தக் குழந்தை வேண்டாம்'', உண்மைக்கதைகள், 1980.

32. பிரதிபாராஜகோபாலன், “ஒவ்வொருவரிடமும் ஒரு ரகசியம்”, அயல் மகரந்தச்சேர்க்கை, 1980.

33. பாசகதேவன், “அடிவாழை”, உள்களும் வெளிகளும், 1977.

34. ஜெயகாந்தன், “இறந்தகாலங்கள்”, இறந்தகாலங்கள், 1969.

35. புவனன், “தெய்வம், ஒன்று நினைக்க”, பாவை உள்ளம், 1960.

36. நீல. பத்மநாபன், “ஷணங்கள்”, மோகம் முப்பது ஆண்டு, 1969.

37. தா. ஏ. ஞானமூர்த்தி, “மனநிம்மதி”, அவர் வாழ வேண்டும், ப.இ.

38. தமிழ்முடி “மனமாற்றம்”, ..........., 1969.

39. செல்வராஜன், “ஞான ஆரிசியை”, ..........., 1979.

40. மாரி அறவாழி, “ஸ்டேஷன்கள் மாறலாம்”, கண்ணுக்குக் கண்ணாக, 1977.

41. கர்ணன், “ஒரு தருணத்தில்”, ..........., 1977.

42. ஆதவன், “தைரியம் வந்தபோது” கால்வலி, 1975.

43. பீஷ்மன், “ஆத்மாவின் மன்னிப்பு”, ஆத்மாவின் மன்னிப்பு, 1972.

44. திருச்சிபாரதன், “துண்டுக்கடிதம்”, அழியா ஓவியம், 1977.

45. திருச்சிபாரதன், “கவிதைமனம்” துண்டுக்கடிதம், 1977.

46. வடிவன்.

47. அம்பை, ''மிலேச்சன்'', சிறகுகள் முறியும், 1976.

48. ………… ஒரு குடும்பத்தின் கதை, கொழுந்துகள், ப. இல்லை.

49. அறவாணன், ''உன்கண் அவள்'', அவன் அவள் அது, 1974.

50. பாலசுப்ரமணி, ''ரோகிணியின் பெண்'', பச்சைமாலை, 1980.

4. 1. ஆர். சண்முக சுந்தரம் ''பழைய நினைவு'', நந்தாவிளக்கு, 1944.

2. வஸந்தன், ''கோவினி'', தமிழ்நாட்டுச் சிறுகதைகள்.

3. கமலா விருத்தாசலம், ''காதல் பூர்த்தி'', தமிழ்நாட்டுச் சிறுகதைகள்.

4. பி.எம். கண்ணன், ''தெய்வ சங்கல்பம்'', கதைக்கொடி மலர், 1.

5. செல்வக் கேசவராய முதலியார், ''கோமளம்'', அபிநவ கதைகள், 1921.

6. கு. அழகிரிசாமி, ''அழகின் விலை'', வரப்பிரசாதம், 1966.

7. ரகுநாதன், ''திருசங்கு சொர்க்கம்'' ரகுநாதன் கதைகள்.

8. கு.ப. ராஜகோபாலன், ''பிராப்தம்'' சிறிது வெளிச்சம், 1986.

9. கு. ப. ராஜகோபாலன், ''மூன்று உள்ளங்கள்'', சிறிது வெளிச்சம், 1969.

10. ஆர். திருஞான சம்பந்தம், ''எட்டாக்குரல்'', கமலா முதலிய சிறுகதைகள், 1941.

11. வி.எஸ். சுப்பையா, ''கல்யாணப்படம்'', ஆனந்தவெள்ளம்,

12. பி. எஸ். கணேசன், "கூம்பிய தாமரை", பாவமன்னிப்பு, ப இ.

13. புதுமைப்பித்தன், "பித்துக்குளி", புதிய ஒளி, 1953.

41. பெ. தூரன், "மௌனம்", தங்கச்சங்கிலி, 1954.

15. புதுமைப்பித்தன், "மனநிழல்", அன்று இரவு, 1954.

16. பெ. தூரன், "விதியின் பிழை", காளிங்கராயன்கொடை, 1956.

17. பெ. தூரன், "பொய்த்தேர்", காளிங்கராயன்கொடை, 1956.

18. பிரதிபாராஜகோபாலன், "புதிய சந்திப்பு", அயல் மகரந்த சேர்க்கை, 1980.

19. டி.கே. சீனிவாசன், "நிலாவும் தாமரையும்", எல்லைக்கு அப்பால், 1950.

20. சாமிநாதன், "தூவானம்", நாகம், 1960.

21. இதயன், "காதலோ காதல்", நன்றி உணர்வு, 1965.

22. கோவி. மணிசேகரன், "தியாகு", இதயங்கள், 1961.

23. நல்ல பெருமாள், "இதயம் ஆயிரம் வீதம்", இதயம் ஆயிரம் வீதம், 1970.

24. கமலாவிருத்தாசலம், "காதல் பூர்த்தி", காசுமாலை.

25. சேத்தூர் கூத்தன், "இதயக்குமுறல்", சோலைவனத்திடையே, 1967.

26. குன்னத்தூர் தமிழன். "நினைவுகள் அழிவதில்லை", உள்ளத்தின் கதவுகள், 1979.

27. தமிழ்தாசன், ''காதல் இதயங்கள்'', உள்ளத்தின் கதவுகள், 1979.

28. சுகுணன், ''நகரத்தில் ஒரு தேவதை'', சில ஆதாரங்கள், 1980.

29. ஆளூர் ஜலால், ''நாஹூரம்மா'', சில ஆதாரங்கள், 1980.

30. ஜி.எஸ்., ''ஆவியின் தவிப்பு'', ஞானி, 1963.

31. சொல்சக்தி, ''குற்றமும் தண்டனையும்'', ......... 1976.

32. தேவபாரதி, ''மோதிரம் ஜொலிக்கிறது'', தத்துவ தரிசனம், 1974.

33. ........... காதலாம் காதல், ..........

34. நவீனா, ''புரியாத உறவு'', சொல்லத் தெரியாத சொந்தங்கள், 1979.

35. சி. என். அண்ணாதுரை, ''காலிழந்தான்'', பித்தளை அல்ல பொன்னேதான், 1980.

36. கொன்றை மகாலிங்கம், ''அவளின் முடிவு'', சொல்லத் தெரியாத சொந்தங்கள், 1979.

37. ஜெயந்தன், ''நாலாவது பரிமாணம்'', சம்மதங்கள், 1978.

38. ஜெகசிற்பியன், ''வெண்ணிரவும் கரும் பகலும்'', ஒரு பாரதபுத்திரன், 1974.

39. சி.என். அண்ணாதுரை, ''சுடுமுஞ்சி'', இரு பரம்பரைகள், 1980

5. 1. கு.பா. ராஜகோபாலன், ''திரைக்குப்பின்'', புனர் ஜென்மம், 1945.

2. கு.ப. ராஜகோபாலன், ''காதலே சாதல்'', கனகாம்பரம், 1986.

3. கு.ப. ராஜகோபாலன், ''நூருன்னிசா'', புனர் ஜென்மம், 1945.

4. ஆர். வேங்கடலெட்சுமி, ''தோட்டக்காரன் பேத்தி'', மோகினி, 1946.

5. சோமு, ………… மஞ்சள் ரோஜா, 1954.

6. அண்ணா, ''தங்கத்தின் காதலன்'', கோமளத்தின் கோபம், 1939.

7. சிதம்பர சுப்ரமணியன், ''சசாங்கனின் மனைவி'', கலை-மகள் கதம்பம், 1957.

8. சோமு, ''விதியின் எழுத்து'', மஞ்சள் ரோஜா, 1954.

9. பூவை. எஸ். ஆறுமுகம், ''திருச்சிற்றம்பலம்'', திருச்சிற்றம்-பலம், 1966.

10. குமாரதேவன், ''யாருடைய தோல்வி'', அழைப்பிதழ், 1968.

11. இரத்தினவேல், ''முறிவு'', கலைஞனின் குழந்தை, 1965.

12. பூவை. எஸ். ஆறுமுகம், ''காக்காச்சி'', பூவையின் கதை-கள், 1962.

13. சுதாபாலகிருஷ்ணன், இப்படி ஒரு பிரச்சனையா?, 1978.

14. நா. பார்த்தசாரதி, ''இன்னும் எழுதப்படாத கவிதை'', இது பொதுவழி அல்ல, 1979.

15. பூவை. எஸ். ஆறுமுகம், ''வேனில் விழா'', வேனில் விழா 1964.

16. குமாரிமணியன், ''உச்சிக்காலம்'', ஐம்பது வருட ரகசியம், 1968.

17. திருச்சிபாரதன், ''மணக்கோலம்'' அழியா ஓவியம், 1977,

18. இராமநாதன், ''குமுறல்'', மகிழ்ச்சி, 1976.

19. இராமநாதன், "துரோகி", மகிழ்ச்சி, 1976.

20. கரந்தை கணேசன், "வைத்தியம்", வீடும் வெளியும், 1971.

21. ……….. ஏங்கிய உள்ளம், ……….. ,

22. மதியழகன், "மார்க்ரெட் காதல்", முத்துப்பந்தல், 1969.

23. சங்கர்ராம், "குருபரம்பரை", காணிக்கை, 1978.

24. தேவபாரதி, "கன்றுக்குட்டிகளின் காதல்", தத்துவ-தரிசனம், 1974,

25. ஆர் ஆத்மநாதன், ……….. கதைக்கோவை,

6. 1. ஆர். சுந்தரி, "பெண்ணுள்ளம்", சிறுகதைத்தொகுதி, 1944.

2. குகப்பிரியை, "சுல்தான் மகள்", கதைக்கொடி மலர், ப இ.

3. நடேச சாஸ்திரியார், "தூக்குத்தூக்கி", தூக்குத்தூக்கி, 1914.

4. நடேசசாஸ்திரியார், "ரணவீரசிங்கு", திராவிட மத்திய காலக்கதைகள், 1897.

5. நடேசசாஸ்திரியார், "நீலியின் கதை", தூக்குத் தூக்கி, 1914.

6. மறைநாயகன், "ராமையா", சிறப்புச் சிறுகதைகள், 1967.

7. வ. வே. சுப்ரமணிய ஐயர், "அனார்க்கலி" மங்கையர்க்கரசியின் காதல்.

8. பாரதியார், "ஸ்வர்ணகுமாரி", பாரதியார் கதைகள், ப.இ.

9. பாரதியார், "ஆறில் ஒரு பங்கு", பாரதியார் கதைகள், 1964.

10. பாரதியார் "ஸ்வர்ணகுமாரி", பாரதியார் கதைகள், 1964.

11. கல்கி, "வீணையின் நாதம்", வீணையின் நாதம், 1962.

12. கல்கி, "வைராக்கியம்", வீணையின் நாதம், 1962.

13. கல்கி, "திருவழுந்தூர் சிவக்கொழுந்து", திருவழுந்தூர் சிவக்கொழுந்து, 1979.

14. கல்கி, "இடிந்த கோட்டை", மயிலைக்காளை, 1968.

15 கல்கி, "பொங்குமாங்கடல்", அமரவாழ்வு, 1959.

16. கு. அழகிரிசாமி, "ரசவிகாரம்", சிரிக்கவில்லை. ப. இ.

17. கு. அழகிரிசாமி, "இதுவும் போச்சு சிவசிவா", தெய்வம் பிறந்தது, 1960.

18. ரகுநாதன், "மாயை", ரகுநாதன் கதைகள், 1948.

19. பெ. தூரன், ............ பிள்ளைவரம், 1945.

20. தி. க. ரங்கநாதன், "ஏற்றிய விளக்கு", விசைவாத்து, 1960.

21. தி. ஜ. ரங்கநாதன், "அந்திவேளை" மஞ்சள் துணி, 1955.

22. கொத்தமங்கலம் சுப்பு. "கமலம்", மஞ்சுவிரட்டு, ப. இ.

23. பெ. தூரன், "உரிமைப்பெண்", உரிமைப் பெண், 1952.

24. த. நா, குமாரஸ்வாமி, "குகைச்சித்திரம்" கதைக்கோவை 1, ப.இ.

25. எஸ். வையாபுரிப்பிள்ளை, "மணிமுடிமாளிகை", சிறுகதை மஞ்சரி, 1958.

26. எஸ். வையாபுரிப்பிள்ளை, "மணிமுடிமாளிகை", சிறு கதைக்கோவை, 1958.

27. ஆர். ஆத்மநாதன், "அமரவாழ்வு", கதைக்கோவை, 1 ப. இ.

28. தமிழ்ப்பித்தன், "ஈரவர்ணம்" நெஞ்சு நிறைந்தது, 1979.

29. ஜெகசிற்பியன், "கண்ணபுரத்துக் கதாநாயகன்" அஜநயம் 1972.

30. ஜி. எஸ். மணி, "வாழ்வா தாழ்வா"?, ஞானி, 1963.

31. பாலகுமாரன், "பறக்கத் தெரிந்த குஞ்சுகள்", ஏதோ ஒரு நதியில், 1980.

32. பிரதிபாராஜகோபாலன், "எங்கிருந்தாலும் மறக்க மாட்டேன்", அயல் மகரந்தச்சேர்க்கை, 1980.

33. வையவன், "செண்பக மரங்கள்", செண்பக மரங்கள், 1977.

34. தா. ஏ. ஞானமூர்த்தி, "அவர் வாழவேண்டும்", அவர் வாழவேண்டும். ப.இ.

35. தா. ஏ. ஞானமூர்த்தி, "நடிகை", அவர் வாழவேண்டும்.

36. தா. ஏ. ஞானமூர்த்தி, "சூடாமலர்", அவர் வாழவேண்டும்.

37. தா. ஏ. "ஞானமூர்த்தி, நினைப்பவை எல்லாம் நடந்து விட்டால்", அவர் வாழவேண்டும்.

38. பா. செயப்பிரகாசம், தெற்கின் ஆத்மாக்கள், ஒரு கிராமத்து ராத்திரிகள்.

39. பிரதிபாராஜகோபாலன், "ஞாபகங்கள் சுகமானவை", தவிர்க்க முடியாத நிழல்கள்.

40. சு. சமுத்திரம், "அங்கே கல்யாணம் இங்கே கலாட்டா", குற்றம் பார்க்கில்.

41. மாரிவாழி, "கோலம்", கண்ணுக்குக் கண்ணாக, 1977.

42. தேவபாரதி, "அனுமதியின் பேரில்", வழியனுப்புதல், 1977.

43. பூவை, எஸ். ஆறுமுகம், "மையலும் தையலும்", வேனில் விழா, 1966.

44. ஆறு இராமநாதன், "காதலர் கனவு", மகிழ்ச்சி, 1976.

45. திருச்சிபாரதன், "வேண்டாம் அவள்", அழியா ஓவியம், 1977.

46. வண்ணதாசன், "தனிமை", கலைக்கமுடியாத ஒப்பனை-கள், 1976.

47. ரெ. கார்த்திகேசு, "பாவமூட்டை", புதிய தொடக்கங்கள், 1974.

7. தி.ஜ. ரங்கநாதன், "அரச குமாரியின் ஆவி", நொண்டிக் கிளி, 1959.

8. 1. தி.ஜ. ரங்கநாதன், "முனியம்மா பந்தயம்", மஞ்சள் துணி.

2. து. இரத்தினவேல், ........... கலைஞனின் குழந்தை.

9. 1. கு. ப. ராஜகோபாலன், "என்ன அத்தாட்சி", சிறிது வெளிச்சம், 1969.

2. கண்ணதாசன், "பாவத்தின் அதிபேதம்", செய்திக் கதைகள்,

3. கோவி. மணிசேகரன், "இதயங்கள்" ............ 1961.

10. 1. ரசவாதி, "ஆசையின் நிழல்", ஆசையின் நிழல், 1966.

2. பூவை. எஸ். ஆறுமுகம், "அவரை மறந்துவிடுவேன்", கறுப்புக்குயில், ப.இ.

3. கோமல் சுவாமிநாதன், ..........., விருந்தாளி.

4. மு மேத்தா, "இந்தச்செடி மறுபடி பூக்குமா"? அவளும் நட்சத்திரம்தான்.

5. ஜோதிர்லதா கிரிஜா, "காதலுக்கு ஒரு தலைமுழுக்கு", அடைக்கலம்.

6. தேவபாரதி, "வழியனுப்புதல்", வழியனுப்புதல், 1977.

7. எம்.பி. சுப்ரமணியன், தூங்கா மணிவிளக்கு, 1967.

11. 1. பூவனன், "காதலா? உறவா?", பாவையுள்ளம், ப.இ.

2. பங்காளிக் காய்ச்சல், மனிதசுபாவம், ப.இ.

12. ராஜம் கிருஷ்ணன், "முழுமை", உயிர்ப்பு, 1978.

13. பாலகுமாரன், "இருட்டு இடம் மாறிக் கொண்டிருக்கிறது", ஏதோ ஒரு நதியில், 1980.

14. எஸ். சங்கரன், "மஹேஸ்வரியின் கோபம்", அன்னை, ப. இ.

2. கோமதிசுவாமிநாதன், "பொம்மை சொன்னகதை", விருந்தாளி, ப. இ.

15. 1. சி. என். அண்ணாதுரை, "பேய் ஓடிப்போச்சு", அண்ணாவின் சிறுகதைகள், 1946.

2. கல்கி, "திருவழுந்தூர் சிவக்கொழுந்து" திருவழுந்தூர் சிவக்கொழுந்து, 1979.

3. அப்பாஸ், "நீடூழி வாழ்க", தெய்வங்கள், ப. இ.

4. சிவசு, "பரதை" உள்களும் வெளிகளும், 1977.

5. சண்ணபிரான், "ஒரு பிரச்சனைக்குத் தீர்வு", உமாவுக்காக.

6. கல்கி, "திருவழுந்தூர் சிவக்கொழுந்து", 1979.

7. சுஜாதா, "அரங்கேற்றம்", வானத்தில் ஒரு மௌன-தாரகை.

8. வி.எஸ். சுப்பையா, "மாயமோகினி", ஆனந்த வெள்ளம், 1970.

9. தமிழ்முடி, "பொன்மலர்", ………… 1969

10. தமிழ்முடி, "கலப்புமனம்", ………… 1969.

11. ருக்மணி பார்த்தசாரதி, "மனமாற்றம்", அமுதுமயம், 1974.

12. ருக்மணி பார்த்தசாரதி, "முத்தாவின் செல்வன்", அமுதுமயம், 1974.

13. சியெஸ்ஸார், "சிகிச்சை", மேனகா, 1974.

14. சியெஸ்ஸார், மேனகா", தங்கத்திருவேண்டி, 1974.

15. சி.என். அண்ணாதுரை, "சமூக சேவகி சாருபாலா" செவ்வாழை, 1980.

16. கு.மா. பாலசுப்ரமணி, "மனைவி வந்தாள்", பச்சை மாலை, 1979.

17. பிரதிபாராஜகோபாலன், "ஸ்வப்னா", அவளும் ஜன்னலும் தூரத்து நீலமும், 1979.

18. பிரதிபாராஜகோபாலன், "ஸ்வப்னா", அவளும் ஜன்னலும் தூரத்து நீலமும், 1979.

19. பிரதிபாராஜகோபாலன், அவளும் ஜன்னலும் தூரத்து நீலமும் 1979.

20. ………… "இரண்டாவது மனம் மூன்றாவது கண்", தவிர்க்க முடியாத நிழல்கள், 1977.

21. பிரதிபாராஜகோபாலன், தேவதையும் ஒரு பிற்பகல் நேரமும்,

22. சுப்ரமணியன், "தவறும் உணர்வும்", ………… 1967.

23. ………… அழகு, …………

24. ………… தூங்காமல், …………

25. கரந்தைகணேசன், "மானம்", வீடும் வெளியும், 1971.

26. பூவை. எஸ். ஆறுமுகம், "மனம் என்னும் வேள்வியிலே", வேனில் விழா, 1964

27. பூவை.எஸ். ஆறுமுகம், "தனிக்காட்டு ராணி", வேனில் விழா, 1964.

28. பூவை.எஸ். ஆறுமுகம், "ஆணவத்தால்", வேனில்விழா, 1964.

29. பூவை.எஸ். ஆறுமுகம், இன்று நேற்று வந்த சொந்தமா? வேனில்விழா,

30. ஜெயகாந்தன், "லவ்பண்ணுங்கோ சார்", யுகசக்தி, 1961.

31. மெர்வின், "என்மகள்", புனிதா புன்னகை பூக்கிறாள்.

32. நா. பார்த்தசாரதி, "மல்லிகையும் மரிக்கொழுந்தும்", இது பொதுவழியல்ல, 1979.

33. கி. ராஜேந்திரன், "எஜமானி", தொடர்வாழ்க்கை, 1966.

34. காவிரி நாடன், "இந்தப்பூனையும் பால் குடிக்குமா"? ஞானவயல், 1972.

35. காவிரி நாடான், "நெருப்பில்லாமல் புகையாது". ஞான வயல், 1972.

36. அப்துல் சமத், "இருப்புத்திரை கிழிந்தது", பிறைப்பூக்கள், 1979.

37. அப்துல் சமத், "ஹாஜியார் மாப்பிள்ளை", பிறைப்பூக்கள், 1979.

38. அப்துல் சமத், "எங்கிருந்தோ வந்தாள்", பிறைப்பூக்கள், 1979.

39. ரா. சு. நல்ல பெருமாள், "யாருக்கு உலகம் தெரியாது", இதயங்கள் ஆயிரம் விதம், 1970.

40. விந்தன், "சொக்கி", முல்லைக்கொடியாள், 1964.

41. பூவை.எஸ். ஆறுமுகம், "தியாகு", கறுப்புக்குயில், 1968.

42. பூவை.எஸ். ஆறுமுகம், "காதல் கவிதை", கறுப்புக்குயில், 1968.

43. கி. ராஜேந்திரன், "கலைச்செல்வி", கலைச்செல்வி, 1963.

44. கி. ராஜேந்திரன், "கண்ணாடி மாளிகை" கலைச்செல்வி, 1963.

45. சேத்தூர்கூத்தன், "சோலை வனத்திடையே", சோலை வனத்திடையே, 1967.

46. அ. முத்துலிங்கம், "வாழவைத்தவள்", பெண்மை வாழ்ந்தது, 1965.

47. சௌரி, "நாழிக்கிணறு", நாழிக்கிணறு, 1967.

48. வாசவன், "அனிச்சம்பூ", அனிச்சம்பூ, 1965.

49. பூவை.எஸ். ஆறுமுகம், ''வியாழச்சந்தை'', பூவையின் கதைகள், 1962.

50. மாயாவி, ''மதம் என்ன மதம்'', தங்கம், 1967.

51. நாலி, ''கெட்டிக்காரி கலியாணி'', கதைக்கோவை, 1.ப.இ.

52. .......... ''கதை எப்படி?''

53. .......... ''மெய்க்காதல்''

54. .......... ''சிவில் சிங்கராயர்''

55. க. சாமிநாதன், ''உத்தம சம்பாவனை'' நாகம், 1960.

56. சம்பந்தன், ''விதி'', கதைக்கோவை, 1940.

57. கல்வி, ''என் தெய்வம்'' வீணை பவானி, 1965.

58. கல்வி, ''எஸ். எஸ். மேனகா'', சாரதையின் தந்திரம், 1978.

59. எஸ். சுந்தரம், ''ஊட்டு'', சில ஆதாரங்கள், 1980.

60. பிரதிபாராஜகோபாலன், ''கடவுளுக்குக்கருணைஉண்டா?'' அயல் மகரந்தச்சேர்க்கை, 1980.

61. .......... ''காத்துவெட்டியான் கருணை''.

62. ஜெயகாந்தன், ''லவ்பண்ணுங்கோ சார்'', யுகசந்தி, 1961.

63. கி. ராஜேந்திரன், எஜமானி, தொடர்வாழ்க்கை, 1976.

16\. 1. வண்ணதாசன், "பறப்பதற்குமுன் கொஞ்சம் புழுக்களாக", கலைக்கமுடியாத ஒப்பனைகள், 1978.

2\. சரோஜினி சங்கர், "சுபத்ரா", நித்யா, 1965.

17\. ர. சு. நல்லபெருமாள், "யாருக்கு உலகம் தெரியாது"? இதயம் ஆயிரம் விதம், 1970.

18\. சௌரிராஜன், "தங்கை", கதைமலர்கள், 1977.

19\. சுமங்கலி, 1. 2. '87, ப. 39.

20\. 1. வி. எஸ். சுப்பையா, "இரண்டு கரண்டி சீனி"; ஆனந்த வெள்ளம், 1970

2\. இ. வா. ஜகந்நாதன், "விஷப்பரீட்சை", கலைஞன் தியாகம், 1941.

3\. மாதவையா, "வரன்தேடும் வைபவம்", குசிகர் குட்டிக் கதைகள்.

4\. ச. ரகுநாதன், "அம்மா சுத்த பயித்தியம்", நினைவுச்-சுமைகள், 1977.

5\. ஜோதிர்லதா கிரிஜா, "இப்படியும் ஒருத்தி", அடைக்கலம் 1977.

6\. மா. போ. குருசாமி, "கிழிந்த நீதி", கிழிந்த நீதி, 1978.

7\. சு. சமுத்திரம், "உறவின் விலை" குற்றம் பார்க்கில், 1976.

8\. மாதவையா, "அது நேர்ந்தவிதம்" குசிகர்குட்டிக்கதை-கள், 1924.

9\. ............ தண்டல் நாயகி.

10. அப்துல் சமத், ''நியதி'', பிறைப்பூக்கள், 1979.

11. சௌரி, ''கதையும் காதலும்'', நாழிக்கிணறு, 1967.

12.ச. முருகானந்தம், ''அற்பஜீவிகள், மீன்குஞ்சுகள், 1980.

13. சௌரி, ''நடக்கப்போகிறது'' நாழிக்கிணறு, 1967.

14. அனந்த நாரரயணன், (தொ. ஆ) ''இவன் சொத்து'', பின்னணி, 1970.

15. குமாரிமணியன், ''பெண்பார்க்க வந்தவர்கள்'' ஐம்பது வருட ரகசியம், 1968.

16. விந்தன், ''இன்பதுன்பம்'', முல்லைக்கொடியாள், 1964.

17. குமாரதேவன், ''அழைப்பிதழ்'', அழைப்பிதழ், 1968.

18. பாலகிருஷ்ணன், ''கசடு'', ஏழை அழுத கண்ணீர், 1964.

19. அனந்தநாராயணன், (தொ. ஆ.) ''பின்னணி'', 1970.

20. அனந்தநாராயணன், (தொ. ஆ.) ''நான் தூக்கத்தில் நடக்கிறேன்'', பின்னணி, 1970.

21. 1. சிதம்பர சுப்ரமணியன், ''என்று வருவானோ?'' கலைமகள் பொன் விழாக்கதம்பம்.

2. ஜேயெம், ''புல்லுருவி'', தமிழகமுஸ்லீம் சிறுகதைகள், 1979

3. அப்துல்சமத், ''ஈறல்'', பிறைப்பூக்கள், 1979.

22. அகிலன், ''எரிமலை'', எரிமலை, 1970.

23. பூவை. எஸ், ஆறுமுகம், ''கனவு'',

24. 1. கௌரி, "கதையும் காதலும்", நாழிக்கிணறு, 1967.

2. விந்தன், "உறவினர் எதற்கு", முல்லைக்கொடியாள், 1964.

3. கே.வி. சுப்பையா, வள்ளியின் திருமணம், 1970.

25. சுமங்கலி, 1.12.'87., ப.39.

26. சுமங்கள், 1.9.'88., ப.14.

26. 1. சகுந்தலா, ………… 1944.

2. வஸந்தன், "கல்யாணியின் கனவு", தமிழ்நாட்டுச் சிறுகதைகள்,

3. சரஸ்வதி தியாகராஜன், "எப்போ வருவாரோ"? மின்னொளி.

4. மாதவையா, "வரன்தேடும் வைபவம்", குசிகர் குட்டிக் கதைகள், 1924.

5. ஜெயகாந்தன், "குறைப்பிறவு", சிறுகதைச்செல்வம். 1934.

6. ஸரஸா, "எப்போ வருவாரோ?" சிறுகதைத்தொகுதி, 1944.

7. சிதம்பர சுப்ரமணியன், "என்று வருவானோ?" கலைமகள் பொன் பொன்விழாக் கதம்பம்.

8. உஷா ரகுநாதன், "விமானம் ஓட்டினேன்", நாளை இருக்கிறது, 1963.

9. அகிலன், "யார் தியாகி", சகோதரரன்றோ? 1964,

10. கலை அன்பன், ''அழகின் அடிமை'', அழகின் அடிமை, 1967.

11. மெய்யடியான், ''ஏக்கங்கள் பெருமூச்சுகள்'', 1979ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதைகள், 1980.

28. கோமதிசுப்ரமணியம், "மணமாலை", சிறுகதைத்தொகுதி, 1944,

29. 1. ........... ........... அழகின் ஆழம்.

2. அ. முத்துலிங்கம், பக்குவம், அக்கா, 1964.

30. ஆர். சண்முக சுந்தரம், ''நந்தாவிளக்கு'' நந்தாவிளக்கு, 1944,

31. என். ஏ. வேலாயுதம், "தடை நீங்கியது", கடலுள் செல்லும் அலைகள்.

32. கோதாபார்த்தசாரதி, ''எங்க வீட்டிலும் ஒரு டெலி-விஷன்", கண்ணன் வருவான், 1979.

33. அழ. வே. ராமசாமி, ''அதுதான் ரகசியம்", ஏழைப்பெண், 1978.

34. தாமரைக்கண்ணன், ''ஞாயிற்றுக்கிழமை'', எழுநாள், 1972.

35. ஸ்ரீவத்ஸன், ''விபத்தை வரவேற்கிறேன்'', பிரார்த்தனை, 1964.

36. அகிலன், ''கண்திறந்தவன்'' நெல்லூர் அரிசி, 1964.

37. வி. எஸ். சுப்பையா, ''நிலவுப்பெண் தந்த கவிதை", ஆனந்த வெள்ளம், 1970

38. 2. கி.வா. ஜகந்நாதன், "மறுபடியும்", கலைஞன் தியாகம், 1941.

2. மீனம்பாள், "ஏழைக்குறத்தி", முன்னிலா 1944.

3. ராஜாஜி, "திக்கற்ற பார்வதி", ராஜாஜி குட்டிக்கதைகள், 1937.

4. ராஜாஜி, முகுந்தன், ராஜாஜி குட்டிக்கதைகள், 1937.

5. கல்கி, விடுதலை, வீணையின் நாதம், 1962.

6. மாயாவி, ............ 1967.

7. அகிலன், "மழைக்கு ஒதுங்கிய இடத்தில்", எரிமலை, 1970.

8. சோமு, "கம்பிமத்தாப்பு", கேளாத காணம், 1955.

9. சோமு, 1955.

10. தமிழ்முடி, "நட்பு", தமிழ்முடி கதைகள், 1969

11. அருணா சண்முகம், "ஊமைப்படம் ஓடுகின்றது", ஊமைப் படம் ஓடுகின்றது, 1980.

12. சிவசங்கரி, "அம்மாவுக்காக ஒரு பொய்", ட்ரங்கால், 1980.

39. 1. ............ "நட்சத்திரம் கீழே இருக்கிறது," கோணல்கள்,

2. கரிச்சான் குஞ்சு, "நூறுகள்", கரிச்சான் குஞ்சுகதைகள், 1981.

40 1. கு.ப. ராஜகோபாலன், "தாய்", கனகாம்பரம், 1969.

2. கு.ப. ராஜகோபாலன், கனகாம்பரம் 1969.

3. எம். எஸ். கமலா, "உமாவின் தியாகம்", கிராம ஊழியன்,

4. ஆறுமுகம். களத்துவாசலில், கதைக்கோவை.

5. ரா.கி. ரங்கராஜன், மீன் குஞ்சு, பல்லக்கு, 1959.

6. பி.வி.ஆர். முதல் விளக்கு, முதல் விளக்கு, 1968.

7. குமாரதேவன், "புனிததரிசனம்", கலைந்த கனவு, 1964.

8. சேத்தூர் கூத்தன், "நல்லவர்களின் செயல்", சோலை வனத்திடையே, 1967.

9. எஸ்.வி.வி. "குறுணி பதக்காகுமா?" என்ன விசித்திரம், ப.இ.

10. பாலகுமாரன், "நெருடலை மீறி நின்று", சிறந்த சிறு-கதைகள், 1978.

11. ரகுநாதன், "ஆளவந்தான்", ரகுநாதன் கதைகள், 1947.

12. வண்ணதாசன், "மிச்சம்", கலைக்கமுடியாத ஒப்பனைகள், 1976.

13. கே.எம். முகம்மது, நம்பிக்கை, ……… 1980.

14. சொல்சக்தி, "வெள்ளை அங்கி", வெள்ளை அங்கி, 1976.

15. ஆ. மாதவன், "காளை", கடைத்தெருக்கள், 1980.

41. 1. தி. ஜ. ரங்கநாதன், ''கல்யாணப்பெண்'', சந்தனக்காவடி, 1941.

2. கர்ணன், ''தாய் உள்ளம்'', ………… 1964.

3. அம்பை, ''அறைக்குள்ளிருந்தவன்'', சிறகுகள், முறியும், 1979.

4. இராமனுசம், ''அழகும் அந்தரங்கமும்'', உள்ளத்தின் கதவுகள். (தொ. ஆ. தாழம்பேடு கவிப்பித்தன்).

5. நீல. பத்மநாபன், ''மோகம் முப்பது ஆண்டு'', மோகம் முப்பது ஆண்டு, 1969.

42. 1. ந. பிச்சமூர்த்தி, ''வயிறு'', இரட்டை விளக்கு, 1967

2. கர்ணன், ''ஊமை'', கனவுப்பறவை, 1977.

43. 1. அகிலன் ''சிறியோர் சேர்த்த சில்லரை'', நெல்லூர் அரிசி, 1964.

2. அகிலன் ''அடிமைப்பெண்'', நெல்லூர் அரிசி, 1964.

3. கு அழகிரிசாமி, ''இருவர் கண்ட ஒரே கனவு'', 1960.

44. 1. சேத்தூர் கூத்தன், ''அன்பின் அழைப்பு'', சோலை வனத்திடையே, 1967.

2. கண்ணபிரான், ''ஒரு வித்தியாசமான பெண்'', தனிமை, 1974.

3. அரு. இராமநாதன், ''மகிழ்ச்சி'', மகிழ்ச்சி, 1976.

4 துணை

5 பொன். சௌரிராஜன், ''சில ஆதாரங்கள்'', மனம் கழுவ-யாதுண்டு? 1967.

45. 1. ந. பிச்சமூர்த்தி, ''வயிறு'', இரட்டை விளக்கு, 1967.

46. ஜெயகாந்தன், ''அந்தக்கோழைகள்'', சுயதரிசனம், 1967.

47. 1. பி.சி. கணேசன், ''புரியாத வாழ்க்கை'', பாவமன்னிப்பு.

2. கு. அழகிரிசாமி, ''திரிபுரம்'', சிரிக்கவில்லை.

3. ரகுநாதன், ''க்ஷணப்பித்தம்'', இரவில்.

4. டி. கே. சீனிவாசன், ''ஐயோ அம்மா'', எல்லைக்கு அப்பால், 1950.

5. ………… விழல், …………

6. கே.சி.எஸ். அருணாசலம், ''புண்ணாக்கு மூட்டை'', பூர்வீகச் சொத்து, 1965.

7. குமாரதேவன், ''கலைக்கு ஒரு தாயகம்'', அழைப்பிதழ், 1968.

8. பிரதிபாராஜகோபாலன், ''மீண்டும் ஒரு ஜனனம்'', தவிர்க்க முடியாத நிழல்கள், 1963.

9. சுந்தரேசன், ''ஆசைரோஜா'', வன்மக்காரன் காதல்.

10. பிரதிபாராஜகோபாலன், ''வேறுபாடு'', அயல் மகரந்தச் சேர்க்கை, 1980.

11. வையவன், ''ஒரு ரோஜா நனைகிறது'', செண்பகமரங்கள், 1977.

12. அழகிரிசாமி, திரிபுரம், …………

48. 1. கல்கி, ''விடுதலை'', வீணையின் நாதம், 1962.

2. கரிச்சான் குஞ்சு, ''கண் தெரிந்துவிட்டால்'', கரிச்சான் குஞ்சு கதைகள், 1980.

3. மாயாவி, ''நிம்மதி'', தங்கம், 1967.

4. ஜெயகாந்தன், ''குறைப்பிறவி'', தேவன் வருவாரோ?''. 1961.

49. 1. தமிழ்முடி, ''மலரும் மலர் முகமே'', தமிழ்முடி கதைகள், 1969.

2. தி.ஜ. ரங்கநாதன், ''நொண்டிக்கிளி'', நொண்டிக்கிளி, 1959.

3. கர்ணன், ''வாழ்க்கையின் கனவு'', மறுபடியும் விடியும், 1968.

50. 1. லா.ச. ராமாமிர்தம், ''சுருதி'', தயா, 1968,

2. கலையன்பன், ''யார் தவறு?'', அழகின் அடிமை, 1967

51. கமலா விருத்தாசலம், ''ஊமைச்சியின் கல்யாணம்'', விருந்தாளி.

52. சிவசங்கரி, ''ஊனம்'', ட்ரங்கால், 1980.

53. 1. ஜியார்வி, ''மனச்சுமை'', ............ 1977.

53 2. ஜான்லோப்பஸ், ''படகோட்டிமகள்'' ............ 1979,

54. 1. சி. என். அண்ணாதுரை, ''குமரிக்கோட்டம்'', அண்ணா வின் சிறு கதைகள், 1946.

2. சி.என். அண்ணாதுரை, ''குமரிக்கோட்டம்'' இரு பரம் பரைகள், 1980

3. ……….., கல்லும் சொல்லாதோ கதை, மின்னல்,

4. பூவை. எஸ். ஆறுமுகம், ''பொம்மத்தீ'', வேனில்விழா, 1964.

55. பொன். சௌரிராஜன், ''அம்மி மிதித்தான்'' கதைமலர்கள், 1977.

56. சுஜாதா, ''முரண்'', நகரம், 1974.

57. 1. காவிரிநாடன், ''யார்—யாரோ?'' ஞானவயல், 1965.

2. பாலசுந்தரி, ''வாழ்வில் செக்ஸ் இரண்டாம் பட்சம், 1980.

3. சொல்சக்தி, ''கன்னிப்பேய்'', வெள்ளை அங்கி, 1976.

4. கவிப்பித்தன், உள்ளத்தின் கதவுகள், 1979.

5. ஞா. குழந்தைசாமி, காரோட்டியின் காதல், ''என்ன உறவோ?'' 1978.

58. சி.என். அண்ணாதுரை, ''கபோதிபுரக்காதல்'', கோமளத்தின் கோபம், 1940.

59. ராஜாஜி. ''திக்கற்ற பார்வதி'', ராஜாஜி குட்டிக்கதைகள், 1937.

60. ஜெயகாந்தன், ''அக்னிதரிசனம்'', சுய தரிசனம் 1967.

61. அகிலன், ''கரும்பு தின்னக் கூலி'', நெல்லூர் அரிசி, 1964.

63. 1. கண்ணதாசன், ''ஆஷா''. செய்திக்கதைகள், 1980.

2. சாயபுமரைக்காயர், ''அவள் ஏன் அழைத்தாள்?'' பருவம், 1977.

64. பீஷ்மன், ''ஆத்மாவின் மன்னிப்பு, ''ஆத்மாவின் மன்னிப்பு, 1972.

65. 1. குமாரதேவன், ''கிராம மோகினி'', கலைந்த கனவு, 1964.

2. சரோஜினி சங்கர், ''பாரதப்பெண்'', நித்யா, 1965.

3. அகிலன், ''நினைப்பு'', சகோதரரன்றோ? 1963.

4. கி. வா. ஜகந்நாதன்,''இளமைப்பலி'', கலைஞன் தியாகம், 1941.

5. கரிச்சான் குஞ்சு, ''ஆண்கள்,'' கரிச்சான் குஞ்சுகதைகள், 1980.

6. இதயன், ரேவதி போய்வா'', காந்தீயப்பெண், 1965.

7. வண்ணதாசன், ''புளிப்புக்கனிகள்'', கலைக்க முடியாத ஒப்பனைகள், 1976.

8. பா. சந்திரசேகரன், ''மேகங்கள் நிலைப்பதில்லை'', மேகங்கள் நிலைப்பதில்லை, 1977.

9. பி.சி. கணேசன், ''நிர்மலாவின் காதல்'', பாவமன்னிப்பு.

10. அகிலன் ''கடைசி ஆசை'', ஆண்—பெண்.

11. அகிலன், ''நினைப்பு'', கலைமகள் பொன்விழாக் கதம்பம், 1961.

12. பி. எஸ். இராமையா, ''ஸ்விதா'', சிறப்புச்சிறுகதைகள், 1967.

13. இராஜாராம், ''புதுவெய்யில்'', சிறப்புச் சிறுகதைகள், 1967.

14. வ. ரா. ''வண்ணார வீரம்மாள்'', கற்றது குற்றமா? 1944.

15. பாரதியார், ''சந்திரிகையின் கதை'' சந்திரிகையின் கதை, 1925.

16. கல்கி, மனிதத்தெய்வம்'', வீணையின் நாதம்.

17. கல்கி, ''கணையாழியின் கனவு'', கணையாழியின் கனவு 1937.

18. அழகிரிசாமி, ''வாத்தியாரம்மாள்'', தவப்பயன், 1987.

19. லா. ச. ராமாமிருதம், ''தை'', மீனோட்டம், 1978,

66. ஜெகசிற்பியன், ''கடிகாரச்சித்தர்'', கடிகாரச்சித்தர், 1967.

67. 1. பாலசுப்ரமணியன், ''சந்தேகப்புயல்'', 1971.

2. நாச்சியப்பன், ''இதயம் இல்லாதவன்'', அமுதும் தேனும் பாலும், 1978,

68. நடேசசாஸ்திரிகள் திராவிட மத்திய காலக்கதைகள், 1897.

69. 1. வ. வே. சுப்ரமணிய ஐயர், லைலா மஜனூன், மங்கையற்கரசியின் காதல்.

2. பி. எஸ். இராமையா, திரிலோகாதிபத்திரகசியம், ஞானோதயம், 1954.

70. மகுனி. ''ஆட்கொல்லி'', 'தமிழக முஸ்லீம் சிறுகதைகள்', (சாலி.ஜே.எம்.தொ.ஆ.) 1979.

71. மகாதேவன், ''தாலிபாக்கியம்'', 'பிள்ளையார் கவசம்' 1974.

72. பெ.கோ. சுந்தர்ராஜன், 'அந்திமந்தாரை'

73. 1. பி.எஸ். இராமையா, பொசிப்பு, சிறப்புச் சிறுகதைகள், 1967.

2. ஞானமூர்த்தி ............ 1977.

74. 1. பி.சி. கணேசன், ''அவர்கள் அறியாதது?'' பாவமன்னிப்பு.

2. கு ப. ராஜகோபாலன், ''ஸ்டுடியோ கதை'', கனகாம்பரம், 1986.

3. தி.ஜ. ரங்கநாதன், பரிவர்த்தனை, ............ 1960.

75. 1. நா. பார்த்தசாரதி, ''புகழ்த்துறவு'', இது பொதுவழி அல்ல, 1979.

2. மெர்வின், ''தாம்பரம் டு பீச்'', புனிதா புன்னகை பூக்கிறாள் 1977.

3. தாமரைக்கண்ணன், ''நடிகையின் மகள்'', அறுசுவை, 1979.

76. அருள் நிதி, ''கற்பனை அற்புதம்'', கூட்டுக்குஞ்சு.

77. 1. கு.ப. ராஜகோபாலன், ''கதைக்காரன் கர்வம்'' புனர் ஜென்மம், 1945.

2. கு.ப. ராஜகோபாலன், ''தனபாக்கியத்தின் தொழில்'', புனர்ஜென்மம், 1945.

3. ………… ''கற்பகத்தின் கண்ணீர்'', ………… ப.இ.

78. 1. ………… ''நிழல்'', எதிரொலி, ………… ப.இ.

2. ஜெயந்தன், 'சம்மதங்கள்,'' சம்மதங்கள், 1974.

3. டி. செல்வராஜ், ''நோன்பு, நோன்பு, 1966.

4. கர்ணன், ''மூடநெய் பெய்து'', மறுபடியும் விடியும், 1968.

5. ………… வீணாகானம்,

6. மௌனி, ''உறவு பந்தம் பாசம்'', மௌனி கதைகள், 1978.

7. ந. பிச்சமூர்த்தி, ………… 1944.

8. புதுமைப்பித்தன், ………… 1951.

79. கரிச்சான்குஞ்சு, சொரணை, கரிச்சான் குச்சு கதைகள், 1981.

80. அண்ணா, ………… 1939.

81. ஜெயந்தன், ''மாரம்மா'', சம்மதங்கள், 1974.

# இயல் மூன்று

## திருமணமான பெண்களின் பிரச்சனைகள்

தமிழ்மக்கள் தம் வாழ்விலும், பண்பாட்டிலும் முக்கிய இடத்தைப் பெறுவது திருமணம் அது தங்கள் வீட்டிலும் நிச்சயம் நடக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, தம் குழந்தைகள் திருமணத்தில் ஒவ்வொரு பெற்றோரும் அதிக அக்கறை எடுத்துக்கொள்கின்றனர்.

'திருமணங்கள் சொர்க்கத்தில்
நிச்சயிக்கப்படுகின்றன'.

என்ற எண்ணம் தமிழ் மக்களிடையே நிலவுகின்றது.

1. கட்டாயத்திருமணம்
2. பொருந்தாமணம்
3. கலப்புத்திருமணம்
4. மறுமணம்

என திருமணமுறைகளை நான்காகப் பகுக்கலாம்.

**கட்டாயத்திருமணம் :**

திருமணத்தைப் பெரிதும் கடமையாகக் கருதிய பெற்றோர்கள் தம் மகளுக்கு விருப்பம் உள்ளதா இல்லையா என்று ஆராய்ந்துபாராது, மேலும் அவர்களது விருப்பத்திற்கு மாறாகக் கட்டாயப்படுத்தித் திருமணத்தை நடத்துவது கட்டாயத்திருமணம் எனப்படும். (இரண்டாம் பிரிவில் விரிவாக இடம்பெற்றுள்ளது).

**1. பொருந்தாமணம் :**

மணமகள் அல்லது மணமகனுக்கு ஏற்ற துணையைப் பாராமல், அவர்களுக்குப் பொருந்தாத துணையைத் தேர்வு செய்து மணம் செய்வதைப் பொருந்தாமணம் எனலாம்.

பொருந்தாமணமுறையைப் பல சிறு கதைகள் சித்திரிக்கின்றன.

தங்கள் குடும்பத்திற்கிடையேயுள்ள உறவு விட்டுப்போகக் கூடாது என்பதற்காக உறவினரிடையேயும் நண்பர்களிடையேயும் திருமண உறவை ஏற்படுத்துதலை பி.எம். கண்ணன் அவர்கள் தமது கதையில் கூறியுள்ளார்.

சிலர் தங்கள் குடும்பத்தில் உள்ள வறுமையை நீக்குவதற்காக தங்கள் மகள் இளையவளாக இருந்த போதிலும்,[1] மணமகன் வயதானவனாக இருந்தாலும்,[2] இரண்டாந்தாரமாக இருந்தாலும்,[3] அவனை, அவளுக்கு மணம்செய்து வைத்ததாக ஆசிரியர்கள் கூறியுள்ளனர்.

அழகான இளம்பெண்ணை அழகேயில்லாதவன் மணத்தலும்,[4] நன்கு படித்து சிறந்த கல்வியறிவு உடைய பெண்ணை படிப்பறிவில்லாதவன், (கல்வி கற்காதவன்) மணத்தலும்,[5] வயதில் மிகவும் இளையவளை பணத்திற்காக ஆசைப்பட்டு வயதான கிழவனுக்கு மணம் செய்து தருலுதம்,[6] இரண்டாந்தாரமாக மணம் முடித்துத் தருதலும்,[7] சிறந்த தகுதியுடைய பெண்ணை எந்தவிதத் தகுதியும் இல்லாதவன் மணத்தலும்,[8] நன்கு திறமை வாய்ந்தவளை திறமையே இல்லாதவன் மணத்தலும்,[9] அறிவிற் சிறந்தவளை பணத்திற் சிறந்த, அறிவில்லாதவன் மணத்தலும்,[10] சிறுகதைகளில் சித்திரிக்கப்படுகின்றன. இப்பொருந்தா மணத்தால் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் பலவாறு காணப்படுகின்றன.

1. கிழவரை மணந்ததால் இளம் பெண்களுக்கு குழந்தையில்லாத நிலை காணப்படுகிறது.[11]

2. இளம் பெண்களது எதிர்பார்ப்புகள் நிறைவேறாததால் பிற ஆடவருடன் தொடர்பு கொண்டிருந்ததைக் காண முடிகிறது.[12]

3. பொருந்தா மணத்தினால் வெறுப்புற்றும், துன்புற்றும் விலைமகளாதலை காண முடிகிறது.[13]

4. தனது கணவரிடம் தனக்கு பொருத்தமில்லாததால் கணவனுடன் இருக்க மனமின்றி தாய்வீட்டிலேயே தங்கிவிடும் பெண்களையும் காண முடிகிறது.[14]

5. திருமணமான சில நாட்களில் பெண்கள் விதவைகளாகும் நிலையும் காணலாம்.[15]

6. சிறுவயதில் பிரிந்த அண்ணனே தனது கணவன் என்று அறிந்து செய்வதறியாது நிற்கும் பெண்ணின் நிலையை திரு. சுந்தரேசன் அவர்கள் தமது கதையில் கூறியுள்ளார்.

திரு. டி.கே. சீனிவாசன் (எல்லைக்கு அப்பால் அறுந்த கயிறு) தன் தங்கையை மணந்த கிழவன் தூக்கில் தொங்க தூக்குக்கயிற்றை அறுக்கும் முன்பு தங்கையின் தாலிக்கயிற்றை அறுத்தெறிந்ததாகக் கூறியுள்ளது இளைஞரிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியைக் காட்டுகிறது.

கிடைத்துள்ள கதைகளில் 0·65 விழுக்காடுகள் இப்பிரச்சினையைக் கொண்டதாக அமைந்துள்ளது.

1950 ஆம் ஆண்டிற்கு முன்பு - 11 கதைகளிலும்

1950-1980 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் 22 கதைகளிலும், இப்பிரச்சனை இடம்பெற்றுள்ளது.

**கலப்புமணம்**

வரதட்சணைக் கொடுமையை ஒழிக்க உதவும் பல செயல்களுள் ஒன்று கலப்புத்திருமணம் மொழி, இனம், மதம், சாதி - இவற்றால் வேறுபட்டுள்ளவரை மணப்பது கலப்புத்திருமணம்

எனப்படும். சாதி - மதம் - இனம் யாவும் மனிதன் தானாகவே அமைத்துக்கொண்ட ஒன்றாயினும் நாகரிகம் வளர, வளர

'மனம் ஒன்றிப் போனால்
மார்க்கமும் ஒன்றாகும்'

என்ற நிலை ஏற்பட்டு கலப்புத்திருமணங்கள் பல நிகழலாயின. சிறு கதைகளின் வழி, கலப்புத் திருமணத்திற்கு ஏற்பட்ட எதிர்ப்புக்களாகக் கீழ்வருவனவற்றைக் காணமுடிகின்றன.

1. பெண் வேறு ஜாதி என்பதால் தடை,[16]
2. ஐயர் - ஐயங்கார் காதல் திருமணத்திற்கு தடை,[17]
3. வேறு மதம் என்பதால் பெண்களுக்கு கலப்புத்திருமணத்திற்கு தடை,[18]
4. வேறு ஜாதி என்பதால் பெண்களுக்கு கலப்புத்திருமணத்திற்கு தடை,[19]
5. கலப்பு மணத்தால் ஊரார் — வீட்டார் ஒதுக்கிவைத்தல்,[20]
6. உறவினர் பின்பு ஒன்றுசேர்தல்,[21]

கலப்புத்திருமணம் பற்றிய பிரச்சினைகள் 0.31. விழுக்காடுகள் காணப்படுகின்றன.

1950ஆம் ஆண்டிற்கு முன்பு 7 கதைகளும், 1950-1970க்கு இடைப்பட்ட காலத்தில் 4 கதைகளும், 1970 - 1980க்கு இடைப்பட்ட காலத்தில் 5 கதைகளும் இப்பிரச்சனைகளைக் கூறுகின்றன.

மறுமணம்

'உன் பேனா சிந்திய மை
விதவையின் நெற்றியில்
குங்குமமாயிற்று'.

என்று திரு. ஈ.வெ.ரா. பெரியார் அவர்களைத் தமது கவிதையில் புகழுகின்றார் தமிழன்பன் அவர்கள். விதவைகளின் மறுமணத்திற்காகப் போராடிய - போராடும் பல பெரியவர்களைக் கொண்ட நாடு நம் நாடு.

'கல்லானாலும் கணவன்
புல்லானாலும் புருஷன்'

என்ற மரபில் வந்த நம் மகளிர், ஒருவனைக் கணவனாக நினைத்துவிட்ட பின்பு மற்றொருவனைக் கணவனாக - மனதில் நினைக்கவும் தயங்கினர்.

கணவனால் பல கொடுமைகளை அனுபவித்தபோதும் - இந்நிலை கால வளர்ச்சிக்கேற்ப மாறியுள்ளது எனலாம்.

1. சிறுவயதில் பால்ய விவாகம் செய்தவர்கள் பின்பு மறுமணம் செய்ய விரும்புவதையும் மறுமணம், செய்வதையும் காணலாம்.[22]

2) கணவன் இறந்துவிட்ட பின்பு இளம் விதவைகள் மறுமணம் செய்ததையும் ஆசிரியர்கள் கூறியுள்ளனர்[23]

3) தங்களது கணவனால் கைவிடப் பட்ட பெண்கள் மறுமணம் செய்தலையும் கணவனை வெறுத்த பெண்கள் மறுமணம் செய்தலையும் ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.[24]

என்ற நிலைகளில் படிப்படியாக வளர்ச்சி காணப்படுகின்றது

மறுமணம் பற்றிய எண்ணம் மனதில் இருந்தும் அதை வெளியிட முதலில் தயங்கிய பெண்கள் பின்பு துணிந்து மறு மணம் செய்தனர்,

1) பெண்களே முன்வந்து மறுமணம் செய்தல்.[25]

2) விதவைப் பெண்களைப் பிற ஆடவர் விரும்பி முன் வந்து மணத்தல்.[26]

3) பெற்றோரே தம் பிள்ளைக்கு மறுமணம் செய்து வைத்தல்.[27]

4) கொடிய கணவனை விட்டு -வேறு ஒருவனை மணத்தல்,[28]

- போன்ற நிலைகளில் பெண்களின் வளர்ச்சியை ஆசிரியர்கள் தம் கதைகளில் கூறியுள்ளனர்.

மறுமணம் பற்றிய பிரச்சினைகள் 0.31 விழுக்காடுகள் கிடைத்துள்ளன,

இதிலிருந்து பெண்கள் தங்களுக்குப் பிறரால் சூட்டப்பட்ட விதவை என்ற பெயரையும், தங்களைச் சுற்றியிருந்த சிறிய வட்டத்தை விட்டும் வெளியே வரத்தொடங்கி விட்டனர் என்பதை அறிய முடிகிறது.

1950ஆம் ஆண்டிற்கு முன்பு 3 கதைகளும் 1950-70 ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் 6- கதைகளும், 1970-'80 இடைப்பட்ட காலத்தில் 7- கதைகளும் இப்பிரச்சினையைக் கூறுகின்றன.

## 2 கைவிடப்பட்டோர்

'கணவனே கண்கண்ட தெய்வம்'

என்ற கருத்தைக்கொண்ட மகளிர் நம் தமிழக மகளிர். இவர்கள்

கைப்பிடிப்பவன் தன்னைக் கைவிடும்பொழுது சமுதாயத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அநேகம்.

மகளிரை அவர்களது கணவர், உறவினர் கைவிடக் காரணங்கள் பல உண்டு.

1. கைவிடப்பட்டோர்
2. பிரிந்திருப்பவர் (தனியாக வசிப்பவர்)
3. விதவையர்

**பெண்கள் தங்கள் கணவனால் கைவிடப்படக் காரணங்கள்**

1. குடும்பத்தில் உள்ள வறுமையும், பணம் இல்லாத நிலையும் காரணம்.[1]
2. பெண்களிடம் அழகில்லை என்ற சூழல்.[2]
3. குடும்பத்திலுள்ள கடன் தொல்லையால் அதை தீர்க்க முடியாமல் பொறுப்பின்றி கைவிடப்படுதல்.[3]
4. பெண்களுக்கு மணமானவுடன் குழந்தைப் பிறக்கவில்லை என்பதால்.[4]
5. பெண்களுக்கு நோய் ஏற்பட்டதினால் அவர்களோடு வாழப்பிடிக்காமல் ஆடவர் கைவிடுதல்.[5]
6. பிற பெண்களோடு தொடர்புகொண்டு அவளை மணக்கும் பொருட்டு மனைவியை கைவிடுதல்.[6]
7. உடல் ஊனம் என்பதால் கைவிடுதல்.[7]

ஆகிய நிலைகளைச் சிறுகதைகள் சித்திரிக்கின்றன,

கைவிடப்பட்டதால் மகளிருக்கு உள்ள தீராத பிரச்சினைகள் பல இருந்தாலும்

1. பிறர் வீட்டில், வேலைக்காரியாக இருத்தல் [8]

2. வறுமையோடு போராடிப் பிள்ளைகளை வளர்த்தல்,[9]

3. பிச்சை எடுத்து பிள்ளைகளை வளர்த்தல்,[10]

என முடிவில்லாத பிரச்சினைகளோடு வாழ்ந்ததைக் காணமுடி-கின்றது.

கைவிடப்பட்டோர் பிரச்சினைக்கு

1. பிரச்சினைகளோடு போராடி ஏதாவது ஒரு வேலை செய்து பிழைத்தல்.[11]

2. செல்ல வேறு இடமின்றி, வழியும் தெரியாது பிறந்தகத்-திலேயே தங்கிவிடல்,[12]

3. பிறரது வீண் பேச்சைப்பற்றிக் கவலைப்படாது மறு-மணம் செய்து வாழல்,[13]

4. செய்வதறியாது வாழ்க்கையில் வெறுப்புற்று தற்கொலை செய்தல்,[14]

5. பிரச்சினைகளோடு போராடி தனித்து வாழல்,[15]

6. திருந்திய கணவனுடன் மறுபடியும் சேர்ந்து வாழல்,[16]

7. வேறு வழியின்றி, பிழைக்கப் பணம் தேவை என்பதால் விலைமகளாதல்,[17]

போன்ற முடிவுகளை பெண்கள் மேற்கொண்டதை கதைகளின் வழி அறிய முடிகின்றது. இப்பிரச்சினை 1.29 விழுக்காடுகள் காணப்படுகின்றன. சில ஆடவர் தவற்றை உணர்ந்து, திருந்தி தங்கள் மனைவியுடன் சேர்வதும், மகளிர் தனித்து வாழலும், மறுமணம் செய்தல், வேலை செய்தல் — இவை யாவும் கால மாறுதலுக்கேற்ப சமுதாயத்தில் மகளிரது வளர்ச்சி நிலையைக் காட்டுகின்றன

1950 ஆம் ஆண்டிற்கு முன்பு - 27 கதைகளும், 1950-1970க்கு இடைப்பட்ட காலத்தில் - 14 கதைகளும், 1970-'80க்கு இடைப்பட்ட காலத்தில் - 24 கதைகளும் இப்பிரச்சனையைக் கூறுகின்றன.

**தனிமை**

'தனிமை மிகவும் கொடுமையானது.'

திருமணம் ஆன பின்பு கணவன் பிரிந்து சென்று விட்டாலோ, உறவினர் பிரித்துவிட்டாலோ, திருமணமே ஆகாமல் தனியாக இருந்தாலோ, பெண்கள் பல துன்பங்களை எதிர்கொள்ள நேரிடுகின்றன.

**பெண்கள் தனிமையில் இருக்கக் காரணங்கள்**

1. கணவன் தேச சேவையில் ஈடுபடல்,[18]

2. பணம் - பொருள் தேடும் பொருட்டுப் பிரிந்த கணவன் வராததால் பெண்கள் தனியாக இருத்தல்,[19]

3. வேலையின் பொருட்டு கணவன் பிரிதல்,[20]

4. கணவன் சிறைசெல்லல், இதனால் பிள்ளைகளோடு தனியாக இருத்தல்,[21]

5. பிறர் சூழ்ச்சியாலும், மன வேறுபாட்டினாலும் கணவனைப் பிரிதல்,[22]

போன்ற காரணங்களை ஆசிரியர்கள் தம் கதைகளில் கூறியுள்ளனர். இப்பிரச்சினை மிகக் குறைந்த அளவில் 0.24 விழுக்காடுகள் காணப்படுகின்றன.

1. பொருள்தேடும் பொருட்டும், வேலையினிமித்தமாகவும், மனம் திருந்தி வந்த கணவனுடன் மறுபடியும் பெண்கள் சேர்ந்து வாழல்,[23]

2. பிரச்சனைகளோடு போராடிப் பெண்கள் தனித்து வாழல்,[24]

என முடிவுகளை கூறியுள்ளனர். 1960 ஆம் ஆண்டிற்குப் பின்பு இப்பிரச்சினைப் பற்றி எந்த செய்தியும் இல்லை.

1950-ஆம் ஆண்டிற்கு முன்பு 2 கதைகளிலும், 19 0-1970 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் 10 கதைகளிலும், 1970-1980-ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் - 2 கதைகளிலும் இப்பிரச்சினை காணப்படுகின்றது.

**விதவை :**

பாலிய விவாகம் பல இளம் விதவைகள் நம் நாட்டில் தோன்ற வித்திட்டது. பண்பாட்டில் முக்கிய இடத்தைப் பெறும் திருமணம், கணவன் இறத்தல் இவை பெண்களைப் பெரிதும் மாற்றத்திற்குட்படுத்தின. கணவன் இறந்ததால் பெண்கள் விதவைக்கோலம் ஏற்க நேரிடுகின்றது. சமுதாயத்தில் இவர்களுக்குப் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

1. கணவர் இறந்துவிட்டதால் உறவினர் பிறரது ஆதரவற்ற நிலை,[25]

2. தாய்வீட்டிலேயும் புகுந்த வீட்டிலேயுமே இருத்தல்,[26]

3. வறுமையுடன் போராடிப் பிள்ளைகளை வளர்த்தல்,[27]

4. கணவரது உறவினரும், பெண்களது உறவினரும் சொத்துப் பிரிப்பதில் தகராறு செய்தல்,[28]

5. ஆண் துணை இல்லாததாலும், விதவை என்பதாலும் பிற ஆடவரது தொல்லைகள்,[29]

6. இயற்கை வயப்பட்ட தங்களது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் பிற ஆடவருடன் மறைமுகமாக தொடர்புகொள்ளல்,[30]

7. விதவைகளாக இருப்பதால் அவர்கள் தங்கியிருக்கும் வீட்டைவிட்டு வெளியேவரத் தடை,[31]

ஆனால் இவ்விதவைகளின் பிரச்சினைகள் கால வளர்ச்சிக்கேற்ப ஆசிரியர்கள் கூறும் முடிவுகளிலும் மாறுதல் நிலை காணப்படுகின்றன.

1. கணவர் இறந்துவிட்டதால் அதைப் பெரிய இழப்பாகக் கருதி யாருடனும் பேசாமல் (மௌன விரதம்) இருத்தல்.[32]

2. உணவு, உடை, பிள்ளைகளின் நல்வாழ்வு இவைகளுக்காக வேலை செய்து பிழைத்தல்,[33]

3. செய்வதறியாது கன்னிகாமடத்தில் சேரல்,[34]

4. தனிமையைத் தவிர்க்கவும், துணையாகத் தங்களுடன் இருக்கவும் தத்தெடுத்தல்,[35]

5. சமுதாயத்தில் உயர வேண்டி மேலும் கல்வியைத் தொடர்தல்,[36]

6. உறவினர், நண்பர் யாரோடும் சேராது தனித்து வாழல்,[37]

7. அவர்களே விரும்பியும், பெற்றோரே விரும்பியும் மறுமணம் செய்தல்,[38]

8. சமுதாயத்தில் வாழப்பிடிக்காமல் தற்கொலை செய்தல், [39]

9. கணவன் சாகவில்லை என்பதை அறிந்து மகிழ்தல், [40]

போன்ற முடிவுகளை விதவையர் மேற்கொண்டதாக கூறியுள்ளனர்.

இப்பிரச்சினை கிடைத்துள்ள தரவுகளில் 2.25 விழுக்காடுகள் காணப்படுகின்றன. 1950ஆம் ஆண்டிற்கு முன்பு தற்கொலையில் ஈடுபட்ட விதவை மகளிர் 1950 ம் ஆண்டிற்கு பின்பு தத்தெடுத்தல், தனித்து வாழல் போன்ற முடிவுகளை மேற்கொண்டதாக கூறியுள்ளனர். 1960-ஆம் ஆண்டிற்குப் பின்பு பெரும் மாற்றத்தைக் காணமுடிகின்றது. அவர்களே விரும்பியும், பெற்றோரே ஏற்பாடு செய்தும் மறுமணம் செய்வதாக ஆசிரியர்கள் கூறியுள்ளனர். எனினும் இவர்களது பிரச்சினைகள் தீரவில்லை என்பதை கதைகளிலிருந்து அறிய முடிகின்றது.

### 3. கூட்டுக்குடும்பம்

திருமணம் நடந்தவுடன் கணவரின் வீட்டோடு இருப்பது மகளிர் மரபு. இஇவளவு நாள்வரை பெற்று வளர்த்து—ஆளாக்கி—படிக்கவைத்து அநேகம் பொருள் — பணம் செலவு செய்து — திருமணம் செய்து, கூடவே அநேகம் சீர்வரிசைகளை உடன் அனுப்பும் பெற்றோரைவிட்டு, முன்பின் தெரியாத — பழக்கமில்லாத புதிய ஊர் — புதிய சூழல் — புதிய மக்கள் — புதிய உறவு — என்று முற்றிலும் மாறுபட்ட ஒரு புதிய நிலைக்கு ஒரு பெண் ஆளாகும் பொழுது மகிழ்ச்சியாக இருப்பவரும் உண்டு. மாறுபட்டு இருப்போரும் உண்டு.

**கூட்டுக்குடித்தனத்தில் இருக்கும் மகளிருக்கு உள்ள பிரச்சினைகள் :-**

1. வேலையின் பொருட்டு பிரிந்துள்ள கணவருக்குக் கடிதம் எழுத, தாய்வீடு செல்ல மாமியார் தடை விதித்தல்.[1]

2. தாய், வேலையில்லாக் கணவனை இழிவாக நடத்துதல், இதனால் பிறந்தகத்தில் இருக்க முடியாத நிலை.[2]

3. கணவனுடன் பேச - பழக - வெளியே செல்லத் தடை விதிக்கும் மாமியார், நாத்தனார்.[3]

4. சமையலறையிலேயே இருத்தல், இதனால் அனைத்து வேலைகளையும் செய்வதுடன் கணவனைச் சந்திக்க முடியாத சூழல்.

போன்ற பிரச்சினைகளை கூறியுள்ளனர்.

இப்பிரச்சினைகளைப் பார்க்கும் பொழுது மகளிருக்கு ஏற்படும் பிரச்சினைகள் கணவனை மையமாக வைத்தே அமைந்துள்ளதை அறிய முடிகின்றது. கணவனை நம்பி ஒரு புதிய சூழலில் அவள் இருக்கும் பொழுது அவனை நல்ல தோழனாக தாயாக தந்தையாக - நினைத்து நன்கு மனம்விட்டு பேச - சிரிக்க - பழக - வெளியே சென்றுவர கூட்டுக்குடித்தனத்தில் இருப்பவர்களால் முடிவதில்லை எனலாம். இதனால் பெண்களுக்கு அதிகம் பிரச்சினை ஏற்படுவதை அறிய முடிகின்றது. ஆண்கள் தினமும் - வேலைக்காகவோ இல்லை ஏதோ ஒரு காரணத்தால் தினமும் வெளியே சென்றுவருவார்கள். ஆனால் பெண்கள் வீட்டிற்குள்ளேயே அடைப்பட்டுள்ளதால் அவர்களுக்குப் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

கூட்டுக்குடித்தனத்தில் மருமகளின் வயதொத்த பெண்களோ அல்லது திருமணமாகாத பெண்களோ இருந்தால் அவர்களின் மனநிலை கெடாதிருக்கும் பொருட்டு மருமகள் தங்கள் மகனோடு அதிகம் பழகாதிருக்க விரும்புகின்றனர் எனலாம்.

இதனால் பல எதிர்பார்ப்புகளோடு வந்த மருமகள் பாதிக்கப்படுகின்றாள் என்கிறார் திரு.சி.சு. செல்லப்பா (மணல் வீடு - 'புதியவள்')

**இப்பிரச்சினைக்கு ஆசிரியர்கள் தம் கதைகளில்**

1. தங்கள் குடும்பத்தில் உள்ள உண்மையான சூழ்நிலையையும் இதனால் மனைவியின் துயரத்தையும் கணவன் உணர்ந்து தனி வீடு செல்லல் என்ற முடிவினைக் கூறியுள்ளனர்.[5]

தம் பிரச்சினைகளில் முடிவுகாணாத மகளிர் கணவனது கொடுமைக்கும் மாமியார் நாத்தனார் கொடுமைக்கும் ஆளாக நேரிடுகின்றது. இப்பிரச்சினை 1950-ஆம் ஆண்டிற்கு முன்பு ஐந்தே கதைகளில் இடம் பெற்றுள்ளது.

**கணவனின் கொடுமை**

கணவனைத் தெய்வமாக மதிக்கும் பண்பாட்டின் வழி வந்தவர்கள் நம் மகளிர் - திருமணமானவுடன் தங்கள் வாழ்க்கையில் கணவன் என்ற ஒருவன் இடம் பெற்றவுடன் தன் குடும்பத்தையும் உற்றார் - உறவினர் - உடன் பிறந்தோர் யாவரையும் விட்டு கணவனையே நம்பி வரும் பெண்களின் நிலையைப் பல எழுத்தாளர்கள் கூறியுள்ளனர்.

கணவனின் அன்பு கிடைக்காததையே பெரிய கொடுமையாகக் கருதும் பெண்கள் கணவனது கொடுமைக்கு ஆளாகும் பொழுதும் அவனது தீய பழக்க வழக்கத்தினாலும் மிகவும் தொல்லைக்குட்படுகின்றனர்.

**கணவனின் கொடுமைகளாக அறிய வருவன**

1. கணவன் குடிகாரன், சூதாட்டக்காரன், கொடியவன், கொலைகாரன், திருடன் - இதனால் மகிழ்ச்சியும் நிம்மதியுமில்லாத வாழ்க்கையை மேற்கொண்டுள்ள பெண்கள்.[6]

2. கணவனின் சந்தேகம் - அடி - உதை - சித்தரவதை இதனால் தினமும் துயரப்படும் பெண்கள்.[7]

3. கணவனுக்குப் பிற பெண்களோடு தொடர்பு - பிறரை மணத்தல் இதனால் துணையின்றி - ஆதரவின்றி வாழும் பெண்கள்.[8]

4. மனைவியின் இளமை அழிய நாட்டு மருந்து கொடுத்தல் இதனால் உணர்வுகளோடு போராடி கிழவனோடு வாழும் பெண்கள்.[9]

5. கணவன் மனைவியை வேசித்தொழிலுக்கு உட்படுத்தல்.[10]

6. மனைவியின் கர்ப்பத்திற்கு தான் காரணமில்லை என்று பொய் கூறல். இதனால் அவமானம் தாங்காது தற்கொலை செய்துகொள்ளும் பெண்கள்.[11]

7. தாயின் பேச்சைக் கேட்டும் சந்தேகத்தாலும், பிற பெண்ணை மணப்பதற்காகவும் கணவனால் கொலை செய்யப்படும் பெண்கள்.[12]

8. கணவனே அவனது நண்பர்களுடன் உறங்கச் சொல்லல், (ஜீவா - சிறுகதைக் களஞ்சியம் - வேதாந்த கேசரி')

9. பல பொய்களைக் கூறி பெண்களை ஏமாற்றி திருமணம் செய்தல்.[14]

